# Salve Regina




SOCIETY OF ST. PIUS X

செப்டம்பர் 2008

மலர்: 3 இதழ்: 9

(தனிச்சுற்றுக்கு மட்டும்)



## Instaurare Omnia in Christo...

## “சகலத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பித்தல்...”

(எபேசி 1:9)

☎ : 044 - 27426649
Fax : 044 - 27431784
E-mail : chengaidiocese@yahoo.co.in

**BISHOP'S HOUSE**

Kancheepuram Road,
Thimmavaram, Chingleput - 603 101.
Kancheepuram District,
Tamil Nadu - South India.

Rt. Rev. Dr. A. Neethinathan
Bishop of Chingleput

20.06.2008

என் அன்புக்குரிய செங்கல்பட்டு மறைமாவட்ட குருக்கள், இருபால் துறவற சகோதர சகோதரிகள் மற்றும் இறைமக்கள் அனைவருக்கும் உங்கள் மறை ஆயராகிய நீதிநாதன் எழுதிக்கொள்வது.

இறைமகன் இயேசுவின் பெயரால் வாழ்த்தும் செபங்களும்!

எக்காலத்திலும் எல்லா இனத்தாரிலும் கடவுளுக்கு அஞ்சி நடந்து நேர்மையாக செயல்படுபவரே கடவுளுக்கு ஏற்புடையவர். ஆகவே கடவுளுக்கு அஞ்சி வாழ்பவர்களின் சமூகமே திருச்சபை. துன்பங்களுக்கு ஆளாகி மாட்சி பெற்ற கிறிஸ்துவே இச்சமூகத்தின் தலையாய் இருக்கிறார். இத்திருச்சபை கிறிஸ்து வழங்கிய நற்செய்தி மதிப்பீடுகளின்படி தன் வாழ்வை அமைத்து கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோர் எல்லாருக்கும் அருளடையாளங்கள் வாயிலாக மறையுடலாகிய திருச்சபையில் வாழ்வு வழங்குகிறது. இவ்வுலகில் ஒரு சமூகமாக நிறுவப்பெற்றதும் ஒழுங்குமுறையில் அமைந்ததுமாக இத்திருச்சபை பேதுரு வழிவருபவராலும், (பாப்பரசர்) அவரோடு ஒன்றித்திருக்கும் ஆயர்களாலும் வழிநடத்தப்படும் கத்தோலிக்க திருச்சபையில் உளது. *(திருச்சபை 8)* தலையோடு இணைந்த உறுப்புக்கள் எவ்வாறு வலிமையாய் செயல்படுகின்றனவோ அவ்வாறே கிறிஸ்துவோடு இணைந்து திருச்சபையின் அங்கத்தினர்களாய் திகழும் இறைமக்கள் அனைவரும் இணைந்திருக்க வேண்டும்.

இத்தகைய கத்தோலிக்க திருச்சபையின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் விசுவாச போதனைகளுக்கும் ஊறுவிளைவித்து ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைக்கும் விதமாக நமது மறைமாவட்டத்தின் சில இடங்களில் பேதுரு வழி வந்த திருச்சபையின் தலைமை தடை செய்துள்ள அமைப்புக்கள் தவறான சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் பரப்புவதாகவும், அருட்சாதன கொண்டாட்டங்கள் என்கிற பெயரில் வழிபாடுகளை நடத்துவதாகவும் அறிகிறோம். இவை நமது திருச்சபையின் மரபிற்கும், போதனைகளுக்கும் எதிரானவை. இத்தகைய அமைப்புக்களை ஊக்குவிப்பதோ அல்லது அவர்களோடு சேர்ந்து ஒத்துழைப்பதோ திருச்சபையின் போதனைகளுக்கும் சட்டங்களுக்கும் எதிரானது. ஆகவே இத்தகைய அமைப்புக்களை ஆதரிக்கவோ ஏற்றுக்கொள்ளவோ வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு வேளை நீங்கள் இத்தகைய அமைப்போடு இணைந்தாலோ அல்லது அவர்களை ஆதரித்து ஊக்குவித்தாலோ அவர்கள் கொள்கைகளை ஏற்றுக்கொண்டாலோ கத்தோலிக்க திருச்சபை போதனைக்கு எதிராக குற்றம் செய்தவராகிறீர்கள். (திருச்சபை சட்டம் 750,751) மேலும் *திருச்சபை சட்டம் 1364 1 படி,* “ திருச்சபை உறவு ஒன்றிப்பிலிருந்து நீக்கம்”, என்னும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என எச்சரிக்கிறேன்.

இத்தகைய அமைப்புக்கள் உங்கள் பகுதியில் செயல்பட்டால் அதுபற்றி உடனடியாக உங்கள் பங்கு தந்தையருக்கோ அல்லது ஆயரின் செயலகத்துக்கோ உடனே தகவல் தரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

ஆசீருடன்

+ [signature]

+மேதகு ஆயர் நீதிநாதன்
செங்கல்பட்டு மறை ஆயர்

RT. REV. Dr. A. NEETHINATHAN
BISHOP OF CHINGLEPUT

# சகலத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பித்தல் !

சேசுக்கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

முந்தின பக்கத்தில் செங்கல்பட்டு, மேற்றிராணியார் மேதகு. வந். நீதிநாதன் ஆண்டகையின் 20-06-2008 நாளிட்ட சுற்றுமடல் வெளியிடப்பட்டுள்ளது. ஆண்டகையவர்களின் இச் சுற்றுமடலுக்கு தனது கருத்துக்களை தெரிவிக்க 'Salve Regina' கடமைப்பட்டுள்ளது.

20-ம் நூற்றாண்டின் மகத்தான பாப்பரசரான அர்ச். பத்தாம் பத்திநாதரின் Instaurare Omnia in Christo - "சகலத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பித்தல்" என்ற விருது வாக்கை தமதாக்கி காலஞ்சென்ற அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃப்பவர் ஆண்டகையால் திருச்சபையின் முழு அங்கீகாரத்தோடு ஸ்தாபிக்கப்பட்டதுதான் அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபை. அது, பாரம்பரிய கத்தோலிக்க சத்தியங்களையும், போதனைகளையும் வழிபாடுகளையும் உலகெங்கிலும் பரப்பி வருகிறது. தென்இந்தியாவில் தமிழ்நாட்டில் பாளையங்கோட்டையிலும், மும்பை வசேயிலும் நிலைகொண்டு நாடெங்கிலும் கத்தோலிக்க பாரம்பரியத்தை விசுவாசிகளுக்கு ஊட்டி வருகிறது.

இதன் ஒரு அம்சமாக செங்கல்பட்டு மேற்றிராசனத்தைச் சார்ந்த ஆர்.என்.கண்டிகை என்ற கிராமத்தில் சுமார் 10 ஆண்டுகளாக சொந்த மேற்றிராசன அதிகாரிகளால் புறக்கணித்து கைவிடப்பட்ட அவ்வூர் விசுவாசிகளுக்கு அவர்களின் அழைப்பிற்கேற்ப கடந்த ஒரு வருடமாக தமது அப்போஸ்தலத்துவத்தை மேற்கொண்டு வருகிறார்கள். இதனையொட்டியே ஆயரவர்களின் சுற்றுமடல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆயர் அவர்களின் சுற்றுமடல் குறித்து எமது கருத்துக்கள்:

1) ஆண்டகையவர்களின் சுற்றுமடலில் யாரை, எந்த அமைப்பைக் கண்டிக்கிறார்கள் என்பது பகிரங்கமாகக் குறிப்பிடப்படவில்லை. கத். திருச்சபையைச் சாராத பதித மதத்தாரை அதாவது, C.S.I., லூத்தரன், பெந்தகோஸ்தே அல்லது புற்றீசல்களாக தெருவுக்கு தெரு முளைத்திருக்கும் பதித ஜெப வீடுகளையே ஆயர் கண்டிப்பதாக சிலர் நினைக்கக்கூடும். ஆனால், உண்மையில் இம்மடல் கத்தோலிக்க பாரம்பரிய விசுவாச நல்லொழுக்கப் போதனைகளை மட்டுமே போதித்து வரும் அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபைக்கு எதிராகவே எழுதப்பட்டுள்ளது என்பது எமது துணிவு! பெயர் குறிப்பிட்டால் விளம்பரமாகிவிடும் என்ற அச்சம்போலும்!

2) மடலின் முதல் பத்தியில் வந். மேற்றிராணியார் ஆண்டகை "திருச்சபை"க்கான பொருளை 2-ம் வத். சங்கத்திலிருந்து (Lumen Gentium எண்.8) மேற்கோள் காட்டியுள்ளார். இது 2-ம் வத்திக்கான் சங்க ஏட்டில் "**est**" என்ற லத்தீன் வினைச் சொல்லுக்குப் பதிலாக "subsistit in" என்ற வார்த்தையை சேர்த்து தவறான கிறீஸ்தவ ஒன்றிப்புக்கு (Ecumenism) வழி வகுக்கப்பட்ட 2-ம் வத்திக்கான் சங்கத்தின் தப்பறை என்பதை குறிப்பிட விரும்புகிறோம். இதனை Salve Regina ஆகஸ்ட் 2008 இதழில் குறிப்பிட்டிருந்தோம். "கிறீஸ்துவின் திருச்சபை கத். திருச்சபைதான்" என்பதை நாம் அறிக்கையிடுகின்றோம். இந்த "subsistit in" என்ற நவீன வார்த்தை புகுத்தப்பட காரணமாக இருந்தவர் புராட்டஸ்டாண்ட் பதித போதகரான Wilhelm Schmidt என்பவரே.

3) மேலும் தமது மடலில் ஆண்டகையவர்கள் "... தவறான சிந்தனைகளையும், கோட்பாடுகளையும் பரப்புவதாகவும், அருட்சாதன கொண்டாட்டங்கள் என்கிற பெயரில் வழிபாடுகளை நடத்துவதாகவும் அறிகிறோம். இவை நமது திருச்சபையின் மரபிற்கும், போதனைகளுக்கும் எதிரானவை..." என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், எது தவறான சிந்தனை, கோட்பாடுகள் என்றோ; எப்படி அவை தவறு என்றோ குறிப்பிட மறந்துவிட்டார். ஒருவேளை, ஆயரவர்கள் "அருட்சாதன கொண்டாட்டங்கள் என்ற பெயரில் வழிபாடுகளை..." என்று குறிப்பிடுவது நமது குருக்கள் நிறைவேற்றும் பாரம்பரிய திரிதெந்தீன் லத்தீன் ரீதியிலான திவ்விய பலிபூசை மற்றும் தேவதிரவிய அநுமானங்களைக் குறிப்பிடுகிறார் என்றால், அது எந்த வகையிலும் திருச்சபையின் "மரபிற்கும், போதனைகளுக்கும் எதிரானவை" அல்ல. மாறாக, 2000 ஆண்டுகளாக கத். திருச்சபையினுடையவும், பாப்புமார்களின் போதனைகள், வழிகாட்டுதல்களின்படி அமைந்தவை என்பதை வந். ஆயரவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். காண்க : அர்ச். 5-ம் பத்திநாதர் பாப்புவின் Apostolic Constitution - Quo Primum - 1570 A.D. மற்றும் தற்போதைய பாப்பு 16-ம் ஆசீர்வாதப்பரின் Motu Proprio, "Summorum Pontificum" July 07, 2007.

4) மேலும் திருச்சபை சட்டம் எண் 1364-1 படி மற்றும் எண் 750; 751- ஐ சுட்டிக்காட்டி இதன் காரணமாக "இத்தகைய அமைப்போடு (அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபை) இணைந்தாலோ, அல்லது அவர்களை ஆதரித்து ஊக்குவித்தாலோ அவர்கள் கொள்கைகளை ஏற்றுக்கொண்டாலோ திருச்சபை உறவு ஒன்றிப்பிலிருந்து நீக்கம் என்ற தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என எச்சரிக்கிறேன்" என்கிறார் ஆண்டகையவர்கள்.

ஆனால். இன்று நவீன திருச்சபையில் எக்குமெனிசம் என்கிற போர்வையில் அஞ்ஞான, பதித மதத்து வழிபாடுகளை அங்கீகரித்து, ஆதரித்து, அவற்றில் பங்கேற்கும் ஆயர்கள், குருக்கள், துறவியரின் போக்கை என்னவென்று சொல்வது? சற்று சிந்தித்தால் அத்தகையோரே திருச்சபை விலக்கம் பெறத்தக்கவர்களன்றோ!

அதே சமயம், அர்ச். 10-ம் பத்திநாதர் சபை குருக்களின் பூசை மையங்களில் (Mass Centres - கவனிக்க பூசை மையங்கள்தானேயொழிய தனிப்பங்கு Parish அல்ல) பங்கேற்றதற்காகவும், அக்குருக்களுக்கு ஆதரவு வழங்கியதற்காகவும் 6 ஹவாய் (Hawaii) நாட்டு விசுவாசிகளை, அம்மேற்றிராசன ஆயர் ஃபெராரியோ (Ferrario) 1991 ஜனவரி 18-ல் திருச்சபை விலக்கம் செய்து அறிவித்தார். ஆனால், அதனை அப்போதைய விசுவாச கொள்கை ஆணையத்தின் தலைவராக இருந்த கர்தினால் ராட்ஸிங்கர் ஆண்டகை (தற்போதைய பாப்பு 16-ம் ஆசீர்வாதப்பர்) 1993, ஜுன் 4, அன்று, அது செல்லத்தக்கது அல்ல என்று அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையில் **"...கிடைக்கப் பெற்ற அனைத்து ஆவணங்களையும் தீர ஆராய்ந்து பார்த்த பிறகு, இவ்வாணையம், மனுதாரர் செய்த காரியங்கள் எவையேனும் பிரிவினை என்ற குற்றத்தை செய்வதற்குப் போதுமானவைகள் அல்ல என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. மனுதாரர் இந்தக் குற்றத்தை செய்யவில்லையாதலால், திருச்சபை விலக்கம் என்ற தண்டனைக்கு உட்படவில்லை; மேற்றிராணியார் ஃபெராரியோ கொடுத்த தண்டனை செல்லுபடியாகாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது."**

தொடர்ச்சி பக்கம் 16 காண்க

# குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்


**- அதிமேற்றிராணியார் மிக வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை -**

(கடந்த 42 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண விசுவாசிகள் செய்வதறியாமல் திகைத்துபோய் உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விடிவெள்ளியாக அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை திகழ்கிறார். அவர் எழுதிய "குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு ஓர் திறந்த மடல்" என்ற நூலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இது நிச்சயமாக குழம்பிப் போயிருக்கும் கத். மக்களின் மனங்களில் எழும் சந்தேகங்களுக்குப் பதிலாக அமையும் என்பதில் ஐயமில்லை. – ஆசிரியர்)

## (8) புதிய வடிவத்தில் தேவதிரவிய அநுமானங்கள்!

## மெய்விவாகம்

அதே போன்றே திருமணம் பற்றியும் வினா எழுப்பப்படுகிறது. திருமணம் எப்போதும் அதன் முதல் நோக்கமான குழந்தைகளைப் பெற்று வளர்ப்பது, இரண்டாவது நோக்கமான திருமண அன்பு மூலமாகவும் இலக்கணம் கூறப்பட்டு வந்தது. ஆனால், இப்போது சங்கத்தில் இதை மாற்றும் முயற்சி செய்யப்பட்டது. இனி முதன்மையான நோக்கம் என்பது இல்லை. ஆனால் இரண்டு நோக்கங்களும் சரிசமமானவையே என்று சொல்லத் தலைப்பட்டனர். இந்த மாற்றத்தை முன்மொழிந்தவர் கர்தினால் சூனன்ஸ். அதைக் கேட்ட சாமிநாதர் சபையின் பொது அதிபர் கர்தினால் பிரௌவுன் ஆண்டகை அவையில் எழுந்திருந்து " caveatis! caveatis!" - அதாவது எச்சரிக்கை! எச்சரிக்கை! இந்த கருத்தை நாம் ஏற்றுக் கொண்டால், திருச்சபையின் பாரம்பரியத்திற்கு எதிராக செல்பவர்களாவோம். திருமணத்தின் அர்த்தத்தை இழிவுபடுத்து பவராவோம். திருச்சபையின் பாரம்பரிய போதனைகளை மாற்று வதற்கு நமக்கு அதிகாரம் இல்லை என்று கூறியது இன்னமும் எனக்கு நினைவிலிருக்கிறது!



கர்தினால் பிரௌவுன் தம்முடைய எச்சரிப்புக்கு வலு சேர்க்கும் ஆவணங்கள் முன்வைக்க, அங்கே அர்ச். இராயப்பர் பேராலயத்தில் மிகுந்த கொந்தளிப்பு ஏற்பட்டது. அதனால் பாப்பானவர், கர்தினால் (சூனன்ஸை) தமது வார்த்தைகளை மட்டுப்படுத்தும்படியாகவும், மாற்றம் செய்யும்படியாகவும் கட்டாயப்படுத்த வேண்டியதாயிற்று. இருந்தபோதிலும் Gaudium et spes என்ற மேய்ப்புபணி சாசனம் குழப்பமான வாக்கியங்களைக் கொண்டிருக்கிறது. அதில் "பிள்ளைகளைப் பெற்று வளர்த்தல்" என்ற சொற்தொடர் வலியுறுத்தப்பட்டிருந்தாலும், திருமணத்தின் மற்ற நோக்கங்களுக்கு இணையாக்கி விட்டார்கள். குழப்பமான வார்த்தைகளைப் பயன்படுத்தி குழந்தை பெற்று வளர்த்தல் என்ற திருமணத்தின் முதன்மையான உன்னத நோக்கத்தை, திருமண அன்பு என்ற இரண்டாம் நோக்கத்திற்கு இணையாக்கிவிட்டார்கள். நவீன உலகமும் இதைத்தானே விரும்புகிறது. இன்று திருமணத்தைப்பற்றி பேசப்படுவது எல்லாம் கர்தினால் சூனன்ஸ் வெளியிட்ட தவறான கருத்துக்களில் இருந்துதான் வருகிறது. இவரது கருத்துப்படியான திருமண அன்பு என்பது விரைவாகவே மிகவும் கொச்சையான முறையில் "பாலுறவு" என்று சொல்லப்பட்டது. அதுவே திருமணத்தின் முதல் நோக்கமாகவும் மாறியது! அதன் விளைவாக, "பாலுறவு" என்ற தலைப்பில் எல்லா பாவச் செயல்களும், கருத்தடை, குடும்பக்கட்டுபாடு இறுதியாக சிசுக் கொலை இவையெல்லாம் அனுமதிக்கப்படுகிறது.

ஒரு தவறான இலக்கணம் (பொருள்) கொடுக்கப்பட்டதன் விளைவாகவே இன்று நாம் மொத்தமாக ஒழுங்கின்மைக்கு உள்ளாகி இருக்கிறோம். பாரம்பரிய முறையிலான திவ்விய பலிபூசையில், "ஆண்டவரே எங்களுடைய மன்றாட்டுக்களுக்கு தேவரீர் தயையோடு செவிசாய்த்து, மனுக்குலப் பெருக்கத்திற்காக தேவரீர் நியமித்த உம்முடைய ஏற்பாடுகளைத் தயவாய்க் காத்தருளும்; உமது கற்பனையினால் இணைக்கப்படும் இந்த விவாகம் உமது உதவியினாலேயே காப்பாற்றப்படக்கடவது" என்று குருவானவர் ஜெபிக்கிறார். இத்திருமணப்பூசைக்கு நிருப வாசகம் அர்ச். சின்னப்பர் எபேசியருக்கு எழுதிய (எபேசி. 5: 22, 23) நிருபத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இந்நிருபம் தம்பதியினரின் கடமைகள், அவர்களுடைய கூட்டுறவை கிறீஸ்துநாதர் தன்னுடைய திருச்சபையோடு கொண்டிருக்கிற உறவின் உருவகமாக

காண்பித்து விளக்குகிறார். (மேலை நாடுகளில்) திருமணம் செய்ய இருக்கிற தம்பதியினரே பூசைக்குரிய வாசகங்களைத் தெரிந்துகொள்ள விடப்படுகிறார்கள். சில நேரங்களில் திருமணத்திற்கு சம்பந்தமில்லாத சுவிசேஷகப் பகுதியையும், வேதாகமம் அல்லாத பிற புத்தக வாசகங்களையும் வாசிக்கிறார்கள். குரு தன்னுடைய பிரசங்கத்தில் தம்பதியருடைய கடமைகள்பற்றி எதுவும் பேசாமல், திருச்சபை தடைசெய்கிற ஒரு அமைப்பாக அதை எண்ணிவிடுவார்களோ என்ற பயத்துடனோ அல்லது விவாகரத்து செய்தவர்கள் ஒருவேளை சபைக் கூட்டத்தில் இருந்தால் அவர்கள் மனம் நோகுமே என்று விட்டுவிடுவார்கள்.

எப்படி ஞானஸ்நானத்தில் செய்தார்களோ, அதே போல திருமண விஷயத்திலும் பல சோதனை முறைகளைப் பின்பற்றுகிறார்கள்! பல கட்டங்களில் நிறைவேற்றப்படும் "திருமணம்" - தேவதிரவிய அநுமானமற்ற "திருமணத்தை" செய்துவைக்கிறார்கள். இவைகளெல்லாம் கத்தோலிக்கர்களுக்கு துர்மாதிரிகையாக இருக்கின்றன. மேற்றிராசன அதிகாரிகளால் பொறுத்துக்கொள்ளப்படும் இந்த சோதனை முறை, அதிகாரப்பூர்வமான அமைப்பு விதிக்கும் வழிமுறையின்படி, மேற்றிராசன அதிகாரிகளின் ஊக்குவிப்புடன் நடக்கிறது. உதாரணமாக Jean Bart Centre என்ற அமைப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் திருமண சடங்கின் வழிமுறையைப் பார்ப்போம்.

முதலில் வாசகம்: "முக்கியமானவை கண்களுக்குப் புலப்படாதவை" (அர்ச். இராயப்பர் நிருபம்) - வார்த்தைபாடு எதுவும் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் உழைப்பு மற்றும் உழைப்பாளர் ஒற்றுமையைக் குறிக்கும் அடையாளமாக கைகொடுத்தல் நடைபெறும். (மந்திரிப்பு இல்லாமல்) மோதிரங்கள் அமைதியாக மாற்றிக்கொள்ளுதல். மணமகன் செய்யும் தொழில்பற்றிய சில குறிப்புகள் தரப்பட்டு, முத்தங்கள் பரிமாறிக்கொள்ளுதல். கூடியிருப்போர் அனைவராலும் ஒரு "பரலோக மந்திரமும்", "அருள்நிறை மந்திரமும்" சொல்லப்படும். பின்னர் புதுமணத் தம்பதியர் மாதா சுரூபத்திற்கு ஒரு மலர் கொத்து வைப்பதோடு திருமணச் சடங்கு நிறைவுபெறும்...!

இறுதியாகச் சொல்லப்படும் இரு சிறு ஜெபங்கள் தவிர, மற்றபடி சுபாவத்திற்கு மேற்பட்ட எதுவும் இல்லாத இச்சடங்கைக் கொண்டு தேவதிரவிய அநுமானமான மெய்விவாகத்திற்குப் பதிலாக மாற்றினார்கள் என்றால் எதற்காக ஆண்டவர் இந்த தேவதிரவிய அநுமானத்தை ஏற்படுத்த வேண்டும்? ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பாக, Saône-et-Loire-ல் (பிரான்ஸ் நாட்டு மாகாணம்) நடந்த "வரவேற்பு வழிபாட்டை" நியாயப்படுத்துவதற்குச் சொல்லப்பட்டவை என்னவென்றால் "இந்த திருமண வரவேற்பு வழிபாட்டின் மூலமாக, இளம் தம்பதியர்க்கு சிறிது காலத்திற்குப் பின் திரும்ப வந்து திருமணம் செய்து கொள்ளும் ஆசை - விருப்பத்தைக் கொடுப்பது" என்பதே! இப்படிச் செய்யப்பட்ட 200க்கும் அதிகமான போலி திருமணத்தில், 2 வருடங்களுக்குப்பின் ஒரு தம்பதியர்கூட திரும்ப வந்து தங்கள் (உண்மையான திருமணம் ஆகாத நிலையை) சரிசெய்யவில்லை! அவர்கள் திரும்ப வந்து தங்கள் 'திருமணத்தை' சரிசெய்து கொண்டாலும், அது வரையிலும் அவர்கள் திருமணமான தம்பதியர் போல கூடி வாழ்ந்ததை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளார் பங்கு குரு! இப்படி 2 வருடகாலமாக, உண்மையிலேயே மந்திரிக்கப்படாமல் - திருமணம் செய்யாமல் கூடி வாழ்வது பாவமே அன்றி வேறு என்ன?

அதிகாரப்பூர்வமான திருச்சபை கணக்கெடுப்பின்படி, பிரான்ஸ் நாட்டின் பாரீஸ் நகரில் மட்டுமே 23% பங்குத்தலங்கள் இப்படி தேவதிரவியமாகாத திருமணத்தை (Non-Sacramental marriage) நடத்தி இருக்கின்றன! இவை அவர்களுடைய குடும்பங்களை மகிழ்விப்பதற்காகவோ அல்லது தம்பதியரின் ஆசையை நிறைவு செய்வதற்காகவோ, இல்லையெனில் சமூக ஒன்றிப்பிற்காக செய்யப்படுகின்றன.

இப்படிப்பட்ட காரியங்களில் கத்தோலிக்கர்கள் கலந்துகொள்ள வேண்டியதில்லை என்பது சொல்லாமலே தெரியவேண்டியது. இப்படி போலி திருமணம் செய்து கொண்டவர்களோ, தாங்கள் ஆலயத்தில் "திருமணம்" செய்ததாகச் சொல்வார்கள்; சந்தேகமின்றி தாங்கள் வாழும் நிலை சரிதான் என்றும் எண்ணத் தொடங்குவார்கள். தவறான வழியில் இட்டுச்செல்லப்பட்ட கத்தோலிக்கர்களோ ஒன்றுமே இல்லாமல் இருப்பதைவிட இந்த நிலை (போலி திருமண நிலை) மேலான நிலைதான் என்று எண்ணிக்கொள்வார்கள்; இப்படி அக்கறையற்றதனம் மேலோங்கி, விரைவில் எவ்விதமான ஏற்பாடுகளையும் - பதிவு திருமணம்முதல், இளம் உள்ளங்கள் திருமணமின்றி சேர்ந்து வாழும் நிலைவரை - ஒப்புக்கொள்வார்கள். முழு கிறீஸ்தவ சமுதாயத்தின் அழிவு முன்நிற்கிறது.;

தம்பதியர் இருவரும், குழந்தைகளை பெற்றுக் கொள்வது என்று முடிவு செய்தால், மெய்விவாகம் என்ற தேவதிரவிய அநுமானத்திலிருந்து வரும் குழந்தைகளை வளர்த்தெடுப்பது என்ற வரப்பிரசாதமின்றி இருக்கிறார்கள். பரிசுத்தப்படுத்தப்படாத இல்லங்களில் குடும்பங்கள் பிளவுபடுவது அதிகரித்துள்ளன. இது எவ்வளவுக்கென்றால் பிரான்ஸ் நாட்டு சமூக மற்றும் பொருளாதாரத் துறை தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது! மத சார்பற்ற சமுதாயம்கூட ஸ்திரப்படுத்தப்படாத குடும்பங்கள், போலி குடும்பங்களினால், தாம் அழிவை நோக்கிச் செல்வதாக அறிந்திருக்கிறது என்ற தமது ஆய்வை வெளியிட்டுள்ளது.

(தொடரும்)

# செய்திகள்

## ★ போலி காட்சிகளை வளர்த்துவிட்டவருக்குக் கண்டனம் !

Medjugorje என்ற Bosnia-Herzegovina நாட்டு ஊரில் மாதா காட்சி கொடுப்பதாக சொல்லி, அது பெரிய திருத்தலமாக்கப்பட்டு, ஜூன் 25, 1981 முதல் இந்நாள்வரை 40,000 முறை மாதா பேசியுள்ளதாக கூறப்பட்டு வந்தது!

இத்திருத்தலத்தை தல மேற்றிராணியார் ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை. இதை பிரபல்யப்படுத்திய Vlasic என்ற பிரான்சிஸ்கன் சபை குரு அன்மையில் வத்திக்கான் விசுவாச சங்கத்தினால் கடுமையாக கண்டனம் செய்யப்பட்டுள்ளார்.

## ★ கத்தோலிக்க அயர்லாந்தில் குருக்கள் பற்றாக்குறை !

உலகத்தில் வேதபோதகத்திற்க அநேக குருக்களை அனுப்பிய அயர்லாந்து நாடு, இன்று குருக்கள் பற்றாக்குறையினால் அவதிப்படுகிறது! கடந்த ஆண்டு 160 குருக்கள் மரணமடைந்தார்கள். ஆனால் 9 பேர் மட்டுமே புதிதாகக் குருப்பட்டம் பெற்றார்கள்!

# அர்ச். பத்தாம் பத்திநாதரின் திருச்சபையைக் குறித்தான ஆவல்கள்!

(தற்கால பாப்புமார்களில் அர்ச்சியசிஷ்டவராகவும், நவீனத் தப்பறையின் சம்மட்டியாகவும், திருச்சபையின் தலைசிறந்த வழிகாட்டியுமாகத் திகழ்ந்தவர் அர்ச். 10–ம் பத்திநாதர் பாப்பரசர் ஆவார். இவ்வாண்டு ஆகஸ்ட் 4–ம் நாள் அவர் குருக்களுக்காக எழுதிய "Hærent animo"என்ற நிருபம் வெளியிடப்பட்ட நூற்றாண்டின் நிறைவாக உள்ளது. இதனை சிறப்பிக்கும்படியாக 2003–ம் ஆண்டு நவம்பர் 16–ம் நாளன்று பிரான்ஸ் நாட்டு, கோல்மா நகரில் அர்ச். ஜோசப் இல்லத்தில் வந். மேற்றிராணியார் திஸ்ஸியர் த மாலாரி ராய் ஆண்டகையவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தை தமிழாக்கம் செய்து வெளியிட்டு மகிழ்கின்றோம். ஆ.ர்.)



அர்ச். பத்தாம் பத்திநாதர்

*அன்பார்ந்த விசுவாசிகளே,*

*நமது குருக்கள் சபையின் பாதுகாவலரான அர்ச். 10-ம் பத்திநாதரை மரியாதை செய்யும் விதமாக உங்கள் மத்தியில் ஆடம்பர திவ்விய பலிபூசை நிறைவேற்றுவது எனக்கு பெரும் மகிழ்ச்சியளிக்கிறது.*

*1903-ல் அர்ச். பத்தாம் பத்திநாதர் 13-ம் சிங்கராய ருக்குப் பிறக பாப்பரசரானார். அவர், 1903 முதல் 1914 வரையிலான 11 வருடங்கள் மட்டுமே ஆட்சி பொறுப்பில் இருந்தார். இது மிகவும் குறுகிய காலமேதான். ஆனாலும், சமீப காலத்தில் இருந்த பாப்புமார்கள் எவரும் செய்யாத அளவான காரியங்களை செய்திருக்கிறார். அவர் திருச்சபை யைப் புதுப்பித்தார். ஒருவேளை இது கடினமான வார்த்தை யாக இருக்கலாம். ஆக, அவர் திருச்சபையை அதனுடைய மையமான சேசுக் கிறீஸ்துவிடம் கொண்டு வந்தார்.*

"Omnia instaurare in Christo - *சகலத்தையும் கிறீஸ்துவில் புதுப்பித்தல்". இன்னும் சரியாகச் சொல்வதா னால் சகலத்தையும் சேசுக் கிறீஸ்துநாதரின் தலைமையில் கொண்டு வருதல் என்பது அவருடைய விருதுவாக்காக இருந்தது. எமது சபையின் ஸ்தாபகர் அதிமேற்றிராணியார் வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை, அர்ச். 10-ம் பத்தி நாதரின் விருதுவாக்கைக் கண்டு வியந்து, தன்னுடைய சொந்த ஞான வாழ்வின் உள்ளரங்க ஜீவியத்தின் மையமாகத் தனது மேற்றிராணித்துவத்தின் தாரக மந்திரமாயும் வைத் திருந்தார். அர்ச். சின்னப்பரின் இவ்வாக்கியத்தை (எபேசி. 1:10), அர்ச். 10-ம் பத்திநாதர் குருமாணவர்களுக்கும், விசுவாசிகளுக்கும் அடிக்கடி நினைவு படுத்துவார்; அனைத்தையும் சர்வேசுரனுக்கும் மனிதருக்கும் இடையே ஒரே மத்தியஸ்தரும், இரட்சகருமாகிய சேசுக் கிறீஸ்துநாதரின் ஒரே தலைமையின் கீழ் கொண்டு வாருங்கள் என்று கூறுவார். மத்தியஸ்தரை மேன்மை பாராட்டும் அதே வேளையில் மத்தியஸ்தியான மகா பரிசுத்த கன்னிமரியாயை அர்ச். 10-ம் பத்திநாதர் மறந்தவர் அல்லர் என்பதை நான் விளக்கிச் சொல்வேன். அனைத்தையும் கிறீஸ்துவில் புதுப்பிப்பதற்கு திருச்சபைதான் பெரிய கருவியாக இருக்கிறது என்பார். நமது அர்ச்சியசிஷ்ட பாப்பானவர் தவறிப்போன ஆடுகளை, அவிசுவாசிகள், அஞ்ஞானிகள் என்று அழைக்கப் படுகிற கிறீஸ்தவர்கள் அல்லாதோர், இவர்களையும் கூட்டிச் சேர்ப்பதற்கு திருச்சபை மிகுந்த அழகுள்ளதாகவும் அதிக பலமுள்ளதாகவும், தகுதியுடையதாகவும், பரிசுத்தமுள்ள தாகவும் இருக்கவேண்டும் என்று விரும்பினார்.*

## சத்திய திருச்சபையின் அழகு

*திருச்சபையை மிகுந்த அழகுள்ளதாக்க அர்ச். 10-ம் பத்திநாதர் உரோமைய திருச்சங்கங்களில் ஒன்றை தேவ வழிபாட்டு இசையின் பேரில் குறிப்பாக கிரகோரியன் பாடலின் பேரில் ஒரு தன்னிச்சையான மடலை தயார் செய்யுமாறு கட்டளையிட்டார். இதில் கிரகோரிய இசை பங்குமக்கள் அனைவரின் இசையாக மாறவேண்டும், மேலும் எல்லா விசுவாசிகளும் கிரகோரிய இசையைப் பாடவேண்டும். அதே நேரத்தில் ஆசீர்வாதப்பர் சபைத் துறவியான கேரான்ஜே* (Gueranger) *என்பவரின் முயற்சி இருந்த போதிலும் சொலம்ஸ் மடத்தின் வழிபாட்டு புதுப்பித்தல் துவங்கப்பட்ட போதிலும், சங். எம்மானுவேல் சுவாமியின்* Mesnil-saint-Loup *என்ற கிராம பங்கில் தொடரப்பட்ட முயற்சியின் மத்தியிலும், கிரகோரிய இசை யை இசைப்பது என்து அன்றைய பழக்கமாக இருக்க வில்லை. சங். எம்மானுவேல் சுவாமி தன்னுடைய*



*தொடர்ச்சி 8ம் பக்கம் காண்க*

# தேவ ஆராதனை முறைமை

## தேவ ஆராதனை உடுப்புகள் (தொடர்ச்சி)

### 4. கைப்பட்டு (Manipulum)



**அமைப்பு:** இடதுபுறத்தில் முன்கையில் இருபுறமும் ஒரே அளவாகத் தொங்கும் பட்டுத் துணி. இதன் நடுவிலும் இரு நுனிகளிலும் சிலுவை அடையாளங்கள் தைக்கப்பட்டிருக்கும். பூசை உடுப்புகளின் நிறத்தை ஒத்திருக்கும்.

**ஆரம்ப சரித்திரம்:** உரோமை இராச்சியத்தில் உயர்ந்த பதவியினர் அணிந்த அதிகாரச் சின்னம். வியர்வையையும் புழுதியையும் துடைப்பதற்காக மக்கள் தம் இடக்கரத்தில் வைத்திருந்த கைக்குட்டைதான் பிற்காலத்தில் இம்மாற்றம் அடைந்தது.

**கிறீஸ்துவின் ஞாபகம்:** நமது ஆண்டவரைக் கட்டி இழுத்துக்கொண்டுபோன சங்கிலி களைக் குறிக்கின்றது.

**நமக்கு ஞான அடையாளம்:** இப்பதத்திற்குக் "கை நிறைய" என்பது அர்த்தம். பொறுமையோடு கூடிய நற்கிரி யைகளினுடையவும், நீடிய பொறுமையுள்ள சேவையினுடையவும் சன்மானமாகிய இரட்சணியத்தைக் குறிப்பதுடன் இருதயத்திலும் மனதிலும் தோன்றும் சோதனைகளைத் துடைத்துத் தள்ளவேண்டுமென்றும் உணர்த்தும்.

**அணியும்போது ஜெபம்:** ஆண்டவரே அழுகையினுடையவும், துயரத்தினுடையவும் இந்தக் கைப்பட்டையை அணிந்துகொண்டு அதனால் எனது உழைப்பின் சம்பாவனையை நான் சந்தோஷத்துடன் பெற்றுக்கொள்வேனாக.

### 5. கழுத்துப் பட்டு: ஸ்தோலா (Stola)



**அமைப்பு:** ஆல்பாவின்மேல் கழுத்தைச் சுற்றியும், நெஞ்சின்மேல் குறுக்கேயும் அணிந்து, இடைக் கயிற்றால் அமைத்துக்கொள்ளும் நீண்ட ஒடுக்கமானப் பட்டுத் துண்டு. இதிலும் மூன்று சிலுவை அடையாளங்கள் உண்டு. பூசை உடுப்புகளின் நிறத்தை ஒத்திருக்கும்.

**ஆரம்ப சரித்திரம்:** பெரிய உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய அலுவலின்போது, கண்ணியமாய் அணிந்துகொண்ட பட்டு இது. குருக்களும் தேவ ஆராதனையின்போது இதைத் தரித்துக்கொள்வது வழக்கம்.

**கிறீஸ்துவின் ஞாபகம்:** நமது ஆண்டவர் தம்முடைய பலியை நிறைவேற்றுவதற்காகத் தமது திருத்தோளின்மேல் சுமந்துகொண்டு போன சிலுவையை ஞாபகப்படுத்துகிறது.

**நமக்கு ஞான அடையாளம்:** உலகத்தின் துன்பதுரிதங்களைப் பொறுமையாய்ச் சகித்துக்கொள்ளவேண்டும் என்பதைக் காட்டும்.

**அணியும்போது ஜெபம்:** ஆண்டவரே ஆதித்தகப்பனுடைய பாவத்தினால் நான் இழந்துபோன சாவின்மையின் கழுத்துப்பட்டை எனக்குத் திரும்பவும் தந்தருளும்; தேவரீருடைய பரிசுத்த பரம இரகசியங்களை நான் அணுக அபாத்திரவா னாய் இருந்தாலும் நித்திய சந்தோஷத்திற்கு நான் அருகனாவேனாக.

### 6. பூசை ஆயத்தம்: பிளாநேத்தா (Planeta)



**அமைப்பு:** குரு எல்லா உடுப்புகளுக்கும் மேலே அணிந்துகொள்ளும் பெரிய உடுப்பு. பூசைக்கு ஆயத்தமாகக் கடைசியாய் அணிந்து கொள்ளுகிற உடுப்பானதால் "பூசை ஆயத்தம்" என்று நமது பாஷையில் வழங்கப்படுகிறது.

**ஆரம்ப சரித்திரம்:** அக்காலத்தில் மக்கள் சாதாரணமாக அணிந்துகொண்ட பெரிய வெளி ஆடை இது. நடுவில் தலை நுழைவதற்குத் தகுந்த வட்டவடிவமான ஒரு துவாரம் கொண்ட இந்த உடுப்பு சரீரத்தை முழுவதும் மறைத்துக்கொள்ளக்கூடியதாய் இருந்தது. இது ஒரு சிறு வீடு (காசுலா Casula) என்றும் வழங்கப்பட்டது. மற்றெல்லா உடுப்புகளைவிட இதுதான் அதிக மாற்றமடைந்துவிட்டது.

**கிறீஸ்துவின் ஞாபகம்:** நமது ஆண்டவருக்கு அவர் தாய் அளித்த தையலில்லா அங்கியைக் குறிக்கின்றது. கல்வாரிமலைமீது உரோமைச் சேவகர் இச்சட்டைக்காகச் சீட்டுப்போட்டதையும் நினைப்பூட்டும்.

**நமக்கு ஞான அடையாளம்:** ஆண்டவர் தம்முடைய அடியார்களுக்குச் சுமக்கத் தரும் சிநேகத்தின் நுகத்தடி இதுவே. இந்த இனிய சுமையை நாம் சிநேகத்தை முன்னிட்டுச் சுமந்து செல்லவேண்டும்.

**அணியும்போது ஜெபம்:** *ஆண்டவரே, எனது நுகத்தடி இன்பமுள்ளதாயும் எனது சுமை இலேசானதாயும் இருக்கின்றனவென்று திருவுளம்பற்றினீரே, தேவரீருடைய வரப்பிரசாதத்தை அடைந்துகொள்ள இதை நான் சுமந்து போகக்கடவேனாக, அப்படியே ஆகக்கடவது.*

*இன்னும் தேவநற்கருணை ஆசீர்வாதம், மாலை சங்கீத ஆராதனை, சுற்றுப்பிரகாரம், தீர்த்தம் தெளித்தல் சடங்கு, இச்சமயங்களில்* **சர்ப்பிளீஸ்** (Super peliceum) *என்ற வெள்ளைச் சட்டை,* **ஸ்தோலா** (Stola) *என்ற நீண்ட பட்டு,* **காப்பா** (Cappa) *எனப்படும் ராஜரீகப் போர்வைப் பட்டு,* **பெரெட்டா** (Beretta) *என்னும் தலையணி (பதவிக்குத் தகுந்த நிறமுள்ளது) முதலியன அணியப்படும்.*

*உதவி தியாக்கோன், தியாக்கோன், மேற்றிராணிமார், பாப்பாண்டவர் இவர்களுக்கும் தனித்தனியான உடுப்புகள் இருக்கின்றன.*

# தேவ ஆராதனை உடுப்புகளுக்குரிய நிறங்கள்

*தேவ ஆராதனையில் உபயோகப்படும் உடுப்புகளில், அமிஸ், ஆல்பா, பீடத்துணிகள் இவை நீங்கலாக, குருவும், மற்றவர்களும் தரித்துக்கொள்ளும் உடுப்புகளும், தேவநற்கருணைப் பெட்டியின் திரை, பீடமுகப்புத் துணிகள்* (Antependium) *இவைகளின் நிறம் திருச்சபை ஏற்படுத்தியுள்ள தேவ ஆராதனைமுறை ஒழுங்குக்கு ஏற்றபடி மாறிவரும். சாதாரணமாக* **ஐந்து நிறங்களுண்டு.** *அவையாவன : வெள்ளை, சிவப்பு, பச்சை, ஊதா, கறுப்பு.*

**1. வெள்ளை நிறம்.** *சந்தோஷம், பரிசுத்தம் மாசின்மையைக் காட்டுகின்றது. ஆகையால் நமது திவ்விய இரட்சகர், தேவமாதா, சம்மனசுக்கள், ஸ்துதியர் இவர்களின் திருநாட்களில் அணியப்படுகின்றது.*

**2. சிவப்பு நிறம்.** *இரத்தத்திற்கும், நெருப்பிற்கும், சிநேகத்திற்கும் அடையாளம். ஆதலால் திவ்விய இஸ்பிரீத்து சாந்துவின் திருநாட்கள், திருச்சிலுவை திருநாள், வேதசாட்சிகளின் திருநாட்களில் இது தரிக்கப்படும்.*

**3. பச்சை நிறம்.** *நம்பிக்கையின் அடையாளம். மூன்று இராஜாக்கள் திருநாளுக்குப் பின்வரும் ஞாயிற்றுக் கிழமைகளிலும், இஸ்பிரீத்துசாந்துவின் ஞாயிறுகளிலும் உபயோகப்படுகிறது.*

**4. ஊதா நிறம்.** *தபசுக்கு அடையாளம். ஆகமனகாலத்திலும், தபசுகாலத்திலும், சதுர்காலத்திலும், திருவிழிப்பு நாட்களிலும் இந்த நிறம் அணியப்படும்.*

**5. கறுப்பு நிறம்.** *துக்கத்தைக் குறிப்பதால், பெரிய வெள்ளிக்கிழமையன்றும், மரித்தவர்களுக்காகச் செய்யப்படும் பூசையிலும் இது உபயோகிக்கப்படும்.*

*பெரிய ஆடம்பர நாட்களில் வெள்ளை, சிவப்பு, பச்சை நிறங்களுக்குப் பதிலாக தங்க ஆயத்தமும், வெள்ளைக்குப் பதிலாக வெள்ளி ஆயத்தமும், ஆகமனகாலத்தின் 3-ம் ஞாயிறு மற்றும் தபசுகாலத்தின் 4-ம் ஞாயிறு ஆகிய இந்நாட்களில் உரோசா நிற ஆயத்தமும் உபயோகிக்கலாம்* **(தொடரும்)**

---

*6-ம் பக்கத் தொடர்ச்சி*


*பங்கு ஆலயத்தில் துறவியரின் தேவஸ்துதி நேரங்களை கடைப் பிடித்து, அதில் பங்கு மக்களும் வந்து பங்கேற்கச் செய்தார். விசுவாசிகள் பங்கு குருவோடு சேர்ந்து இரவு ஜெபத்தை* (Compline) *பாடுவதற்கு வருவார்கள். அனைத்து பங்கு மக்களும் பூசையில் கீரியே, குளோரியா, சாங்துஸ் மற்றும் ஆஞ்யூஸ் தேயி போன்ற பகுதிகளை வெவ்வேறு ராகங்களில் பாட தெரிந்து வைத்திருந்தார்கள். திருச்சபையெங்கும் பரவவில்லையானாலும் இது மிகவும் அற்புதமான காரிய மாக இருந்தது. அதே நேரத்தில் மற்ற நாடுகளில், உதாரண மாக இங்கிலாந்து நாட்டில், கத்தோலிக்க மறுமலர்ச்சியின் காரணமாக, கிரகோரியன் இசையின் வளர்ச்சியும் ஏற்பட் டது. இந்நாடுகளில் பயிற்சிபெற்ற பாடற் குழுக்கள் இருந்தன. ஆனாலும், விசுவாசிகள் சேர்ந்து பாடுவது என்பது அரிதான ஒன்றாக இருந்தது.*

*ஆகவேதான் அர்ச். 10-ம் பத்திநாதர் இத்தாலி நாட்டில் மட்டுமல்லாமல், பிரான்ஸ் மற்றும் உலக நாடுகள் அனைத்திலும் விசுவாசிகள் கிரகோரியன் இசையை பயன் படுத்த வேண்டும் என்று வற்புறுத்தினார். இது திருச்சபைக் கே உரிய இசை; கிரகோரியன் இசைக்கு அதற்குரிய மேலான இடம் கொடுக்கப்படவேண்டும் என்றும், இது கத். விசுவாசி களிடையே பரப்பப்படவேண்டும் என்று விரும்பினார். அதுவும் மக்களின் மனதில் இடம் பிடித்தது.*

*இது நடந்தது சங்கத்துக்கு முன்புவரை எல்லா பிரான்ஸ் நாட்டு பங்குகளிலும் பூசை கிரகோரிய இசையில் பாடப்பட்டன. இப்படியாக அர்ச். 10-ம் பத்திநாதர் கிரகோ ரிய இசையால் நமது ஜெபத்துக்கு மெருகூட்டினார். அதன்மூலம் திருச்சபையை மிகவும் அழகுடையதாக்க விரும்பினார்.* **(தொடரும்)**

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!



**[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]**

## முதல் பாகம்


### இரண்டாம் பிரிவு (உபதேசப் பாகம்)

### 6. நிருப வாசகம்

### (அப்போஸ்தலர்களின் போதனை)

*ஆமென் என்ற வார்த்தையோடு சபைச் செபம் முடிகிறது. பிறகு குருவானவர் அன்றைய பூசையின் நிருபத்தை வாசிக்கிறார். அப்போது அவர் தன் உள்ளங்கைகளை பூசைப் புத்தகத்தின் மேல்படி வைக்கிறார். அது, நாம் தேவ வார்த்தை களைக் கேட்பவர்களாக மட்டுமல்ல, அவைகளைக் கடைப்பிடிப்பவர்களாயுமிருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது.*

*இந்த வாசகங்கள் வேதாகமத்திலிருந்து வாசிக்கப்படுகின்றன. இவை படிக்கீதங்களாலும், நெடுக்கீதம், தொடர்கீதங்களாலும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு விசுவாசப்பிரமாணத்தால் முடிசூட்டப்படுகின்றன.*



### வாசிக்கப்படும் வாசகங்களின் முக்கியத்துவம்!

*திவ்விய பலிபூசையில் நமது மீட்பரின் மீட்பின் அலுவல்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, ஆங்காங்கே பூசை நிகழ்வுகள் அனைத்திலும் வியாபித்துக் காணப்படுகின்றன. நமதாண்டவர் சர்வேசுரனுக்கும், மனுக்குலத்திற்கும் மத்தியஸ்தராக இவ்வுலகிற்கு வந்தார். அதனையே தமது விண்ணேற்பிற்குப் பிறகும், தமது திருச்சபையின் மூலமாகத் தொடர்ந்து தேவதிரவிய அநுமானங்கள் வடிவாகச் செயல்படுத்திக்கொண்டு வருகிறார். கிறீஸ்து பரலோகத்தையும், பூலோகத்தையும் ஒப்புரவாக்கி, ஒன்றோடொன்றை இணைக்க வந்தார்.*

*கிறீஸ்துநாதர் "சர்வேசுரனாலே நமக்கு ஞானமும், நீதியும், அர்ச்சிப்பும், இரட்சிப்புமாயிருக்கிறார்" (1 கொரி.1:31). அதோடு மீட்பரான அவர் வரப்பிரசாதத்தின் மூலமாக அர்ச்சிப்புக்கு மட்டுமல்லாமல் மனுக்குலத்திற்கு அனைத்து நிறை சத்தியங்களையும் வெளிப்படுத்துபவராகவும் வந்தார்.*

*இரட்சகரின் முதல் அலுவல் சத்தியத்தை கற்பிப்பதே. வெளியரங்கமான வார்த்தைகளாலும், உள்ளரங்கமான ஞான உணர்த்துதல்கள் மூலமாகவும் சேசு கிறீஸ்து போதித்தார். "...தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும்" (லூக். 4:18) "சத்தியத்திற்கு சாட்சி சொல்லும்படியாக" உலகினுக்கு வந்தார். (அரு. 18:37), அவராலேயே அருளும் சத்தியமும் உண்டாயிற்று. (அரு. 1:16). ஏனெனில் "அவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளின் பொக்கிஷங்கள் யாவும் அடங்கியிருந்தன" (கொலோ. 2:3).*

*சத்தியத்தின் போதகரான ஆண்டவர் சேசு கிறீஸ்து மோட்சத்திற்கான வழியை காண்பித்தப் பிறகு வரப்பிரசாதத்திலும், அன்பிலும் மனிதரை சர்வேசுரனோடு இணைப்பதற்காகவே சிலுவையில் மரணமானார். அவரது இந்த கல்வாரிப் பலி திவ்விய பலிபூசையில் புதுப்பிக்கப்படுகிறது. அதற்கு முன்பாக ஆண்டவர் நித்திய ஜீவியத்தின் வார்த்தைகளை அவரது தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் வார்த்தைகளிலும், பிறகு தமது சொந்த வார்த்தைகளாலும் நம்மிடம் பேசுகிறார். ஆகவேதான், நிருபமும் சுவிசேஷ வாசகங்களும் பலிக்கிருத்தியத்திற்கு முன்பாக இடம்பெறுகின்றன. இந்த ஏற்பாட்டினால் சத்தியத்தின் போதனைக்கும், பீடத்தின் மறைபொருளுக்கும் உள்ள இணைப்பு வெளிப்படுத்தப்படுகிறது.*

*பரிசுத்த அநுமான கடவுள் - மனிதனுமானவர்* (Sacramental God - man) *வெறுமனே ஜீவியமாக மட்டுமல்லாமல், மானிடர்களான நமக்கு சத்தியமும் வழியாகவும் இருக்கிறார். (அரு. 14:6). நற்கருணை பலியாகிய வரப்பிரசாத ஊற்றிலிருந்து மட்டுமே கிறீஸ்துவின் சத்தியம் முழுமையாகவும் பிரகாசமாகவும் ஒளிர்கின்றது. பீடத்தின் வரப்பிரசாதமும் பிரசங்க மேடையின் உண்மையும் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டுள்ள தெய்வீக வாசஸ்தலமாக* (Sanctuary) *உள்ளன. ஏனெனில் ஆலய பீடமானது சர்வேசுரனின் இருப்பிடமாகவும், பலி ஒப்புக்கொடுக்கும் குரு பரலோகச் சத்தியங்களை அறிவிப்பவராகவும் திகழ்கின்றார். ஆகவேதான் திருச்சபை மிகவும் சரியானபடியாக தீர்க்கதரிசன வாசகங்களையும், சுவிசேஷக வார்த்தைகளையும், விசுவாசத்தின் பரம இரகசியமாகிய நற்கருணை பலி நிறைவேற்றத்தோடு இணைந்துள்ளது.*

*திருச்சபை தேவ வழிபாட்டில் வேதாகம, சுவிசேஷ வார்த்தைகளையே தெரிவு செய்கிறது. ஏனெனில் அவர் சர்வேசுரனின் மெய்யான வார்த்தைகளானதால் பரிசுத்தமானவையாகவும், ஆராதனைக்குரியதாகவும், வல்லமையுடையதாகவும், வரப்பிரசாதங்கள் நிறைந்தவையாகவும் இருக்கின்றன. அவை திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவரின் உணர்த்துதல்களாக இருப்பதால், அவை நமது உணர்வுகளையும், ஆவல்களையும், விண்ணப்பங்களையும் ஆண்டவரிடம் வெளிக்காட்டுவதற்கு ஏற்றவையாக உள்ளன.*

*ஜெபத்தில் சர்வேசுரனோடு இணைந்திருக்க அவரைப் புகழ, அவருக்கு நன்றியறிந்திருக்க, அவரிடம் விண்ணப்பிக்க, நமது இருதய சந்தோஷங்களையும், உணர்வுகளையும் கீதங்களாக இசையாகவும் அவரிடமே இந்த வாசகங்கள் பெரிதும் உதவுகின்றன.*

*இந்த வாசகங்கள் அர்ச்சியசிஷ்டதனத்தின் பாடங்களைப் போதிக்கின்றன. சர்வேசுரனுடைய இராஜ்ஜியத்தை நமக்குக் காட்டுகின்றன. அவை அளவற்ற விதமாக "இஷ்டப்பிரசாதத்திலும் நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய சேசுக் கிறீஸ்துவை அறியும் அறிவிலும்" (2 இரா. 3:18) வளர்வதற்குத் தேவையானவைகளை அளவற்ற விதமாகத் தருகிறது.*

## பூசையில் வாசகங்கள் - வரலாற்றுப் பார்வை

*பொதுவாக நிருப வாசகங்கள் அப்போஸ்தலர்களின் நிருபங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன. ஆகையினால்தான் இதனை* "Epistola" (letter) *"நிருபம்"-கடிதம் என்நிகுறிப்பிட்டு அழைக்கப்படுகிறது. திருச்சபையின் ஆரம்ப காலங்களில் அப்போஸ்தலர்கள் ஊர் ஊராகச் சென்று சர்வேசுரனின் சுவிசேஷ செய்தியை எங்கும் போதித்தார்கள். தாங்கள் சென்றுவந்த ஊர்களில் உள்ள விசுவாசிகளுக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதி சுவிசேஷ போதனைகளை ஞாபகமூட்டி வந்தார்கள். இக்கடிதங்கள் வாயிலாக கிறீஸ்தவர்கள் அறிவுரை பெற்று தேவ ஞானத்தில் வளர்ந்து வந்தார்கள். இவ்விதம் ஒவ்வொரு ஊரிலும் உள்ள மேற்றிராணியாருக்கு வரும் அப்போஸ்தலர்களின் கடிதமானது அங்குள்ள மக்களுக்கு பலிபூசையின் போது வாசிக்கப்பட்டது. இந்தப் பழக்கத்தின் வளர்ச்சியாகவே எல்லா திவ்விய பலிபூசையிலும் அப்போஸ்தலர்கள் எழுதிய நிருபங்கள் வாசிக்கப்பட்டன.*

*இந்தப் பழக்கம் படிப்படியாக தேவ வழிபாட்டு முறைமையில் வளர்ச்சியடைந்தது. அப்போஸ்தலர்களின் காலந்தொட்டே வேதாகம நூல்கள்* (Canonical) *தேவ வழிபாட்டுக் கூட்டங்களில் சத்தமாக வாசிக்கப்படும் வழக்கம் இருந்தது. முதல் 4-ம் நூற்றாண்டுகளில் பூசை வழிபாடு நிகழ்வுகள் சுவிசேஷ வாசகத்தோடு துவங்கும். அதில் வேதாகமத்தின் பல்வேறு ஆகமங்கள் தொடர்ச்சியான வகையில் வாசிக்கப்பட்டு வந்தது. திருநாட்களுக்கேற்றபடி சுவிசேஷ வாக்கியங்கள் தேர்ந்தெடுத்து வாசிக்கப்பட்டு வந்தன. ஆனால், நீண்ட காலமாக - வாசிக்க வேண்டிய சுவிசேஷப் பகுதிகளின் வாக்கியங்களை தெரிவு செய்வது மேற்றிராணியாருக்குரியதாக இருந்தது. வேத சாட்சியான அர்ச். ஜஸ்டின் (கி.பி. 166 அல்லது 167) கிறீஸ்தவர்களிடையே வழங்கி வந்த தேவ வழிபாட்டு முறைமையைப்பற்றி விவரிக்கும் போது "ஞாயிற்றுக்கிழமைகளில் கிறீஸ்தவர்களின் ஒன்றிப்பில் (கூட்டத்தில்) அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டவைகளோ (புதிய ஏற்பாட்டு நூல்கள்) அல்லது தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளோ வாசிக்கப்பட்டது" என்று எழுதுகிறார்.*

*தேவ வழிபாட்டு முறைமை நாளடைவிலான வளர்ச்சியோடும் அதிகரித்து வரும் புதிய திருநாட்களுக்கேற்ப வாசிக்கப்படும் வாசகங்கள் அடிக்கடி மாற்றப்பட்டன. 6-ம் நூற்றாண்டில் இப்போதைய பூசை புத்தகத்தில் உள்ளபடியான நிருபமும், சுவிசேஷமும் நிர்ணயிக்கப்பட்டன. இதற்காக பாப்பரசர் முதலாம் தாமாசியூஸின் (கி.பி. 366 - 384) ஆணையின்படி அர்ச். ஜெரோம், பூசைக்கான வேதாகம பாகங்களை பாரம்பரிய ஒழுங்கிற்கேற்ப திருத்தியமைத்தார்.*

*வேதாகம வாசகங்கள், திருவழிபாட்டு ஆண்டிற்கேற்ப அதன் தன்மைக்கும், நிலைக்கும் ஏற்ப தெரிவு செய்யப்படுகின்றன. அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாட்களுக்கேற்ப இவை தீர்மானிக்கப்படுகின்றன.*

*பொதுவாக சட்டப்படியும், சில தவிர்ப்புக்களைத் தவிர ஒவ்வொரு பூசையிலும் இரண்டு வேதாகம வாசகங்கள் இடம் பெறுகின்றன. முதலில் வாசிக்கப்படுவது நிருபம்* (Epistle) *என்றும் மற்றது சுவிசேஷம்* (Gospel) *என்றும் அழைக்கப்படுகின்றன. இதில் முதல் வாசகம் பழைய, புதிய ஏற்பாடுகளிலிருந்து (4 சுவிசேஷம், சங்கீதங்களைத் தவிர்த்து) எடுக்கப்படுகின்றன. மோஷாரபிக்* (Mozarabic) *மற்றும் அம்புரோசியார்* (Ambrosian) *ரீதியிலான வழிபாடுகளில் சுவிசேஷத்துக்கு முன்பாக 2 வாசகங்கள் வாசிக்கப்பட்டன. (ஒன்று பழைய ஏற்பாட்டிலிருந்தும், மற்றொன்று புதிய ஏற்பாட்டிலிருந்தும் எடுக்கப்படுகின்றன.*

*திருச்சபையில்* Ember days *- எம்பர் நாட்கள் - சதுர்கால - நோன்பு நாட்கள் என்று அழைக்கப்படுகின்ற தவ நாட்கள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. இக்காலங்களில் அறுவடையின் மிகுதிக்கான நன்றியாகவும், தியாக்கோன், உபதியாக்கோன் பட்டம் பெறுபவர்களுக்காக ஜெபிக்கவும், நமது பாவப் பரிகாரத்திற்காகவும் இத் தவநாட்கள் புதன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் அனுசரிக்கப்படுகின்றன. சதுர்கால சனிக்கிழமையில் முன்பு ரோமன் ரீதியில் 12 வாசகங்கள் வாசிக்கப்பட்டன. முதல் ஆறு வாசகங்கள் லத்தீன் மொழியிலும், மற்ற ஆறு வாசகங்கள் கிரேக்க மொழியிலும் வாசிக்கப்படுகின்றன. ஆனால் தற்போது 6 வாசகங்கள் மட்டுமே சுவிசேஷத்திற்கு முன்பாக வாசிக்கப்படுகின்றன. அவற்றில் முதல் 5 வாசகங்கள் பழைய ஏற்பாட்டிலிருந்தும், 1 வாசகம் புதிய ஏற்பாட்டு நூலிலிருந்தும் எடுக்கப்படுகின்றன. சதுர்கால புதன்கிழமையில் 2 வாசகங்கள் இடம் பெறுகின்றன.*

(தொடரும்)

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (13) இரட்சகருடைய மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

"சர்வேசுரனுடைய அர்ச்சியசிஷ்ட மாதாவே, கிறீஸ்துவினுடைய மாதாவே, சிருஷ்டிகருடைய மாதாவே'' என்று மாதாவை புகழ்கிறது திருச்சபை. அவர்கள் பெற்றெடுத்த மகன் தேவன் மட்டுமல்ல; சிருஷ்டிகர் மட்டுமன்று; அவர் நமது இரட்சகராகவும் இருக்கிறார். அவர் நிறைவேற்றிய இரட்சணிய அலுவலையும், அதில் பரிசுத்த மரியம்மாளின் பங்கையும் எடுத்துக்காட்டவே சத்திய திருச்சபை, அவர்களை ''இரட்சகருடைய மாதாவே'' என அழைக்கிறது. ''இரட்சகருடைய மாதா'' என்று அழைப்பதும் ''சேசுவின் தாய்'' என்று கூறுவதும் ஒன்றே. ஏனெனில் எபிரேய மொழியில் ''சேசு'' என்கிற வார்த்தைக்கு ''இரட்சகர்'' என்றே பொருள்.



தேவதாய் தம்மை ''எங்களுடைய இரட்சகருடைய மாதாவே'' என்று அழைப்பதை பெரிதும் விரும்புகிறார்கள். ஏனெனில் அது, அவர்கள் சிருஷ்டிக்கப்பட்டதின் முழு நோக்கத்தையும் வெளிப்படுத்துவதாக இருக்கிறது. அமல உற்பவத்தால், அளவில்லாத உயர்வான பரிசுத்தத்தனம் அவர்களுக்குப் பொழியப்பட்டதை இந்த பட்டம் பறை சாற்றுகிறது. தேவ குமாரன் மனுக்குலத்தை பாவத்திலிருந்து இரட்சிப்பதற்காக மனிதனானார்; அதனாலேயே மாமரியும் கடவுளின் தாயாகவும் இரட்சகரின் மாதாவுமானார்கள்.

தமது தேவ மகனான சேசுவை பிறப்பிப்பதற்கும், அவரோடு இணைந்து நெருக்கமாக இருப்பதற்காகவுமே பரமபிதா மரியாயின் ஆன்மாவையும், சரீரத்தையும் பாவத்தின் கறை எதுவுமில்லாமல் பாதுகாத்து அசாதாரண அழகாலும், அறிவாலும், ஞானத்தாலும், வரப்பிரசாதத்தாலும் அலங்கரித்தார். மாதா எப்போதும் தாயாக இருப்பதால் சேசுவும் அவர்களோடு எப்போதும் இணைந்தே இருக்கிறார்.

மாமரி, சேசுவின் மனிதாவதாரத்தை ஏற்படுத்தி தந்தார்கள் ! ஆம், இது சற்று கடுமையான வார்த்தையாகத் தெரிந்தாலும், அதுவே உண்மை ! எப்படியெனில் சர்வேசுரன் தமது மனிதனான சுதனின் மாம்சத்தை – சரீரத்தை வேறு வழிகளில் உருவாக்கியிருக்கலாம். ஆனால் நம்மைப் போன்ற, நம்முடையவரான ஒருவரால், மனிதகுலத்திலிருந்து வந்தவரான ஒரு உண்மையான மனிதராலேயே நாம் மீட்கப்பட வேண்டியதிருப்பதால், சர்வேசுரன் மனிதனானார். அதற்கு ஒரு தாய் தேவை ! இதுவே சர்வேசுரனின் திட்டம். ஆனாலும் சுயாதீன மனதை – சித்தத்தை அங்கீகரிக்கும் சர்வேசுரன் மாமரியின் சம்மதத்தைக் கேட்கிறார். இரட்சணிய திட்டத்தில் மாதாவினுடைய ஆதரவைக் கேட்கிறார். அர்ச். பெர்னார்டு, 'மங்கள வார்த்தை நிகழ்ச்சியின்போது மாதாவின் பதிலுக்கு மனுக்குல இரட்சணியமே காத்துக்கொண்டிருந்தது. ... மாதா இரட்சகருடைய தாயாகும் சம்மதத்தால் நமது இரட்சணியத்தின் கிரயத்தை வழங்கினார்கள்' என்று உரைக்கிறார். தமது பூரண சம்மதத்தின்படியே இரட்சகருக்குத் தாயாகும் பாக்கியம் பெற்றார்கள். இரட்சகராகிய சேசு பாலனை ஈன்றெடுத்தார்கள். சேசு நமக்காகப் பாடுபடுவதற்கு உதவியாக இருந்த மனித சரீரம் மாமரி கொடுத்த சரீரமே; சேசுநாதரின் தேகத்தில் ஓடிய இரத்தம் மாதாவினுடைய இரத்தமே. கடைசியிலே, தான் அன்போடு வளர்த்த மாசற்ற செம்மறிப்புருவையாகிய தன் நேச குமாரன் சேசுவைக் கல்வாரி பலிக்களத்திற்கு அனுப்பியதும் இத்தாயே. தன் ஏக குமாரனை நமக்குப் பலியாக தத்தம் செய்ய இறுதிவரை சிலுவையினடியில் உறுதியாக நின்றதும் இத்தாயே. இதனால் தாம் ''இரட்சகருடைய மாதா'' என்பதை மாமரி எண்பித்தார்கள். ஆம் ! கன்னிமாமரி சேசுவின் தாய்; நமது இரட்சகருடைய மாதாவாக இருக்கிறார்கள்.

கனியிலிருந்து மரத்தை அறியலாம், கனியின் தன்மை மரத்தின் தன்மையை வெளிப்படுத்துமல்லவா? அப்படியானால் கனியாகிய சேசு இரட்சகரின் மகிமை, அந்தக் கனியைத் தந்த மரமாகிய மரியாயின் மகிமையல்லவா? நமக்கு இரட்சகரை தந்த இந்த மகத்தான மாதரசியை திருச்சபையின் பிதாபிதாக்களோடும், சகல அர்ச்சியசிஷ்டவர்களோடும் சேர்ந்து **எங்களது இரட்சகரின் மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்** என்று பிரார்த்தித்து மகிழ்வோமாக !

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

## அருள்நிறை மந்திரத்தின் வியாக்கியானம் (தொடர்ச்சி)

**(5) இப்போது மோட்சத்திலும் தேவ மாதா மெய்யாகவே நமக்குத் - தாய்.** ஏனெனில் நமது ஆத்துமத்துக்கு ஞான உயிர் கொடுக்கும் தேவ இஷ்டப்பிரசாதத்தைப் பகிர்ந்து கொடுக்கும்படி, அவளை நியமிக்க சேசுநாதர்சுவாமி சித்தமானார். அவள் நம்மைத் தன் சொந்தப் பிள்ளைகளாக எண்ணித் தாய்க்குரிய அணைகடந்த அன்போடு நம்மைப் பாதுகாத்து வருகிறாள். தன் பிள்ளைகளுக்கு அவசியமான சகலமும் அவளுக்குத் தெரியும். இந்த அறிவு மோட்சத்தில் அவள் அநுபவிக்கும் பாக்கியத்தின் ஓர் பாகம். ஏனென்றால் மோட்சவாசிகள் அறியப் பிரியப்படுகிற சகலமும் சர்வேசுரன் அவர்களுக்குத் தெரிவிக்கிறார். இப்படியே நமக்கு நேரிடும் அபாய துன்பம் அவசரங்களையெல்லாம் தேவமாதா அறிகிறதினாலே, நமக்கு வேண்டிய வரப்பிரசாதங்களை மகா பட்சத்தோடு அடைந்தருளுகிறாள்.

———

### எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்:

தேவமாதாவை நோக்கி, முழு நம்பிக்கையோடு இவ்வார்த்தைகளைச் சொல்லவேண்டுமென்பதற்கு முகாந்தரங்களென்ன? முந்த முந்த அவள் சகல தாய்மார்களிலும் அதிக நேசமுள்ளவளாயிருப்பதால், நமக்கு வேண்டியதெல்லாம் சம்பூரணமாய்க் கொடுக்கச் சித்தமாயிருக்கிறாள். மேலும் அவள் தம்முடைய திருக்குமாரனிடத்திலிருந்து சகலமும் அடையக்கூடுமாதலால், நமது இரட்சணியத்துக்கு உதவுமானவைகளெல்லாம் பெற்றருள அவளுக்கு வல்லமையுமுண்டு.

**(1) ஆகையால் அவளுடைய வல்லமை அவளுடைய சிநேகத்துக்கே நிகர்.** மகா பட்சம் நிறைந்த இந்தத் தாய் தமது வாக்குக்கெட்டாத வல்லபத்தைக் கொண்டு, அவளுடைய பிள்ளைகளாகிய நமது பேரில் கணக்கில்லாத அரிய பெரிய வரங்களைப் பொழிந்து வருகிறாள். நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தமது மாதாவைச் சிநேகிக்கிறதுபோல மற்ற யாதொரு பிள்ளையும் தன் தாயைச் சிநேகித்ததில்லை. ஆனதைப்பற்றி, அவளுடைய மன்றாட்டை அவர் ஒருக்காலும் புறக்கணிக்கமாட்டார். இதனால்தான் **தன் வேண்டுதலினால் அர்ச். தேவமாதா சர்வ வல்லமையுள்ளவளாயிருக்கிறா ளென்று** வேதசாஸ்திரிகள் நிச்சயித்திருக்கிறார்கள். அர்ச். பெர்நர்துஸ் சொல்வதுபோல : "சகலமும் தேவமாதாவின் வழி யாகவே வரவேண்டும்" என்று சேசுநாதர்சுவாமி திருவுள மானார். இதனால்தன் திருச்சபையானது அவளை "மோட்சத்தின் வாசலே" என்று வாழ்த்துகிறது.

**(2) இந்தச் சர்வ வல்லமை எப்படிக்கொத்த தென்று நன்றாய்க் கண்டுபிடிக்கக்கடவோம்.** சர்வேசுரன் எல்லாவற்றிற்கும் மேலான கர்த்தாவாயிருக்கிறதி னாலே, அவர்தாமே நமக்குச் சகல நன்மைகளையும் அளிக்க வல்லபமுள்ளவராயிருக்கிறார். தேவமாதாவோவென்றால், தன்னுடைய சுபாவ வல்லமையால் நமக்கு ஒரு நன்மையுஞ் செய்யக்கூடியவளல்ல. என்றாலும், அவள் நமக்காக ஆண்டவ ரிடத்தில் மனுப்பேசி நமக்கு வேண்டிய நன்மைகள் யாவற்றையும் அடைந்தருளும்படி அவளை மன்றாடுகிறோம். ஆனதால் தேவ மாதாவை நோக்கி நாம் ஏதேனும் கேட்கும்போது, "எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்றும், சர்வேசுரனை நோக்கி மன்றாடும் போது, "எங்களை இரட்சியும், எங்களுக்குத் தந்தருளும்" என்றுஞ் சொல்லுகிறோம்.

**(3) அர்ச். கன்னிமரியம்மாளுக்குச் செய்யும் வேண்டுதலும் வணக்கமும் என்ன? -** தேவமாதா மேலான அதிகாரமுள்ள இராக்கினியும் நமது அன்புநிறைந்த தாயுமாயிருக்கிறாள் என்பதினாலே, நாம் அவளை முழுமனதோடு சிநேகித்து, எப்போதும் பிரார்த்திக்கக்கடவோம். மீளவும் அவளுக்குத் தேவ ஆராதனை நீங்கலாக, சிருஷ்டிக்குச் செய்யக்கூடிய வணக்கம் எல்லாம் செலுத்தத்தகும். இவ்விதமான பக்தி வணக்கத்திலே நாம் எவ்வளவு செய்தாலும், மிதமிஞ்சிப் போகமுடியாது.

### எங்கள் மரண நேரத்தில்:

நமது அந்தியகாலத்தில், அர்ச். தேவமாதா விசேஷ உதவி செய்யும்படி கேட்பானேன்?

(1) அத்தருணத்தில்தான் நமது இரட்சணியம் முழுவதும் அடங்கியிருக்கிறதென்பதே காரணம். அச்சமயத்தில் நமது சத்துருவாகிய பசாசு கணக்கற்ற சோதனைகளைக் கொண்டுவந்து விட்டு, நம்மை ஆபத்துக்குள்ளாக்க சர்வ பிரயாசைப்படும்.

(2) மேலும், மரணபரியந்தம் இஷ்டப்பிரசாதத்தின் அந்தஸ்தில் உறுதியாய் நிலைத்திருப்பது ஒரு விசேஷ வரமாயிருப்பதினிமித்தம், அதற்காக நாம் வேண்டிக்கொள்ள வேண்டியது அவசியம். இந்தக் கருத்துக்காக அர்ச். தேவமாதாவைத் தாழ்ச்சியோடு இடைவிடாமல் வேண்டிக்கொண்டு, சகலவித புண்ணிய முயற்சிகளையும் செய்துவந்தால், அவளுடைய மன்றாட்டினால் நாம் அந்த வரத்தைப் பெற்றுக்கொள்ளுவோம். (தொடரும்)

## அறிவிப்பு

### 3 நாள் ஞான ஒடுக்கம்!

வருகின்ற அக்டோபர் மாதம் 25, 26, 27 ஆகிய தேதிகளில் ஆண்களுக்கான 3 நாள் தியானம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இடம்: நாகர்கோவில். கட்டணம்: ரூ. 400/– உங்கள் ஆத்தும காரியங்களைக் கவனிப்பதற்கும், சர்வேசுரனை அறிந்து நேசிப்பதற்கும் அதன்மூலம் உங்கள் ஆத்துமங்களை இரட்சித்து கொள்வதற்கு இந்த அரிய வாய்ப்பை தவறாது பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பங்கேற்க விரும்புவர்கள் அக்டோபர் மாதம் 10 ம் தேதிக்குள் பின்வரும் தொலைப்பேசி எண்ணிலோ அல்லது கடைசி பக்கத்திலுள்ள முகவரியிலோ தொடர்பு கொள்ளவும்.**0462 - 2586201** அல்லது **9442625158** (சங். வளன் சுவாமி)

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

( இக்கட்டுரைத் தொடர் "The Catholic Family Handbook" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)



## 1. மகிழ்ச்சியான குடும்பம்

பெற்றோர்களின் வாழ்வில் மிகமுக்கியமான அலுவல் ஏதென்றால், சர்வேசுரன் தங்களுக்கு அருளும் பிள்ளைகளை இவ்வுலகில் மகிழ்ச்சியாக வாழவும், பின்னர் மோட்சத்தில் முடிவில்லாத சந்தோஷத்தை அடைந்து கொள்ளவும் வழிகாட்டியாக இருப்பதே. அது மிக எளிதான காரியமல்ல. ஏனெனில் கிறீஸ்தவ வாழ்வின் அடிப்படை என்றுமில்லாதபடி இக்காலத்தில் அதிகத் தாக்குதலுக்குள்ளாயிருக்கிறது.

பெற்றோர்களுக்கு வழிகாட்டியாக இன்று பல சமய சார்பற்ற நூல்கள் இருக்கின்றன. பெரும்பான்மையான நூல்கள் பெற்றோர்கள் தங்கள் கடமைகளை "எப்படி செய்வது" என்று மட்டுமே கூறுகின்றன. இக்கட்டுரையின் நோக்கமோ குழந்தை - பெற்றோர் உறவு முறையை மிக எளிமையான ஒன்றாக காண்பிப்பதோ அல்லது எல்லா பெற்றோர்களுக்கும், எவ்வித சூழ்நிலைக்கும் ஏற்ற விதிமுறைகளை தருவதோ அல்ல. ஆனால் "ஏன்" செய்ய வேண்டும்? என்ற அடிப்படையான நோக்கத்தை விளக்குவதே! முழுமையான கிறீஸ்தவ குடும்ப வாழ்வு - நிறைவான குடும்ப வாழ்வானது புரிந்துகொள்ளமுடியாத, சர்வேசுரன் மட்டுமே அறிந்திருக்கக்கூடிய வியத்தகும் காரியங்களை கொண்டது. நிறைவான கிறீஸ்தவ குடும்ப வாழ்வு என்பது மெய்யாகவே ஒரு சவால் நிறைந்த, துணிச்சலான ஒன்றாக இருக்கிறது.

இத்தகைய சாகசம் நிறைந்த குடும்ப வாழ்வில் வெற்றி பெறுவதற்கு வெறும் "நல்ல" குடும்பமாக வாழ்வது மட்டும் போதாது. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வாழ்க்கைக் குறித்தான கிறீஸ்தவ சிந்தனைகளை நல்ல சமூக அந்தஸ்திற்கும், நேரிய, பக்குவமான மனநிலைக்கும் கொண்டு வந்துவிட்ட பிறகு பிள்ளைகள் இவ்வுலகில் கிறீஸ்துவை சேவித்து அதனால் கிடைக்கும் சம்பாவணையான மோட்ச நித்திய வாழ்வை அடையாமல் போனால் அவர்கள் பெற்றோராயிருந்து என்ன பயன்?

பெற்றோர்களே நீங்கள் எந்த இலக்கை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதை அறிந்து கொள்ள, உங்களது கத்.குடும்பம் கிறீஸ்துவின் ஞான சரீரத்தை சிறிய அளவாக அடையாளப்படுத்துகிறது என்பதை உணர வேண்டும். கணவனும், தகப்பனுமாகிய ஆண் குடும்ப சரீரத்தின் தலையாக இருக்கிறான். இவன் கிறீஸ்துநாதரையும், மனைவி, திருச்சபையையும், பிள்ளைகள் திருச்சபையின் உறுப்பினர்களாகிய விசுவாசிகளுக்கு குறிப்பவர்களாய் இருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு குடும்பமும நமது வானகத்தந்தையாம் சர்வேசுரனை ஆராதிக்கும்படியாக கிறீஸ்துவால் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக, கூட்டு வாழ்வில் எல்லா உறுப்பினர்களுக்கும் சர்வேசுரனுக்கு மகிமையும், கீழ்ப்படிதலையும் தருகிறார்கள்.

மேலும், குடும்பமானது கிறீஸ்துநாதரோடு இணைந்து தனது அங்கத்தினர்களின் இரட்சிப்புக்காகவும் அதே சமயம் உலகத்தின் மீட்புக்காகவும் உழைக்கின்றது. நமதாண்டவர் திருமணத்தை ஒரு தேவ திரவியமாக உயர்த்தி தமது வரப்பிரசாதத்தை மனிதர்களுக்கு கொடுக்கும் வாய்க்காலாக குடும்பத்தை ஏற்படுத்தினார். இதில் கணவனும், மனைவியும் ஒருவர் மற்றவருக்கும், இருவரும் சேர்ந்து தங்கள் குழந்தைகளுக்கு வரப்பிரசாதத்தை தருபவர்களாய் - வாய்க்காலகாய் இருக்கிறார்கள். அதே போன்று குழந்தைகளும் தங்கள் பெற்றோர்களுக்கு வரப்பிரசாதத்தின் வாய்க்காலாக திகழ்கின்றார்கள். ஞான சரீரத்தின் மற்ற உறுப்பினர்கள் வழியாக வரப்பிரசாதம் நமக்கு வரவில்லை யென்றால் வேறு எந்த வழியாகவும் அது வராது. ஏனெனில் கிறீஸ்துவின் ஞான சரீரத்தின் மற்ற உறுப்பினர்கள் வழியாக வரப்பிரசாதம் பரிமாறப்படுகிறது. இதுவே கிறீஸ்துவின் ஏற்பாடு.

எனவே, பெற்றோர்களும், குழந்தைகளும் தேவ இஷ்டப்பிரசாத நிலையில் இருப்பதும், திவ்ய இஸ்பிரீத்து சாந்துவானவர் தொடர்ந்து அவர்கள் ஆத்துமத்தில் ஜீவிப்பதும் மிகவும் இன்றியமையாதது. ( அப்படியானால்தான் தேவ வரப்பிரசாதம் குடும்பத்தினுள் ஊடுருவி வளம் கொள்ளச் செய்யும் - எப்படி இரத்தமானது சரீரமெங்கும் பாய்ந்து உடலுக்கு உயிரளிக்கிறதோ அதுபோல வரப்பிரசாதம் குடும்பத்தினுள் செயலாற்றுகிறது.) ஆனால் குடும்பத்தில் ஏதேனும் ஒரு ஆத்துமம் சாவான பாவ நிலையில் இருந்தால், அது மற்ற உறுப்பினர்களில் வரப்பிரசாதம் பாய்வதற்கு தடையாக இருக்கும். ( இரத்தநாளங்களில் அடைப்பு ஏற்பட்டால் எப்படி இரத்தம் உடலெங்கும் பாய இயலாதோ அது போன்று சாவான பாவ நிலையிலுள்ள குடும்ப அங்கத்தினர்களில் வரப்பிரசாதம் குடும்பத்தினுள் பாய்வது தடைபட்டு போகும். ஆர்)

(தொடரும்)

# ‘Sanguis Martyrum Semen Christianorum’

## (வேதசாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துவர்களை விளைவிக்கும் வித்து!)

# கத்தோலிக்க விசுவாசத்திற்காக உயிர்நீத்தவர்களின் வரலாறு

(இங்கிலாந்து நாட்டில் ஆங்கிலிக்கன் புராட்டஸ்டாண்ட் பிரிவினையின் போது தங்களது சத்திய கத். விசுவாசத்தில் உறுதியாக இருந்து பதிதத்தை மறுத்து தங்களுடைய இன்னுயிரை நீத்தவர்களின் வரலாறு இங்கே வெளியிடப்படுகிறது.)

## (5) அர்ச். எட்மண்ட் காம்பியன் (1540 -1581)



அர்ச். எட்மண்ட் காம்பியன்

அது, 1566 - ம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் இறுதிநாட்கள். அன்று இங்கிலாந்தில் புகழ்பெற்று விளங்கிய ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வளாகம் விழாக் கோலம் பூண்டிருந்தது. வண்ண, வண்ண அலங்கார வளைவுகள், தோரணங்கள், ஒளியை உமிழும் பல வண்ண விளக்குகள் என எங்கும் ஆடம்பரம்! துணைவேந்தர், பேராசிரியர், அறிஞர்கள், மாணவர்கள், ஊழியர் என பலதரப்பினரும் ஒருவித பதட்டத்தோடு காத்திருந்தனர். வளாகத்தில் மேடைகளும், அறிவார்ந்த சொற்பொழிவு மன்றங்களும், விவாத அரங்கங்களும் அமைக்கப்பட்டு தயாராயிருந்தன. அவற்றில் பங்கேற்று தங்கள் அறிவுத்திறனை எண்பிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் தயாராக நின்றிருந்தனர்.

யாருக்கு இந்த வரவேற்பு? ஆம்! இங்கிலாந்து தேசத்தை ஆளும் தன்னிகரற்ற அரசி முதலாம் எலிசபெத் ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்துக்கு விஜயம் செய்ய வருகிறுள். கத்தோலிக்க திருச்சபையிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு, இங்கிலாந்தின் திருச்சபைக்கு தானே தலைவன் என்று அறிவித்து எதிர்ப்பு மதத்தை உருவாக்கிய 8ம் ஹென்றியின் மகள். அவனுக்கும் அவன் தேவதுரோகமாக மணந்து கொண்ட ஆன்போலினுக்கும் பிறந்த வாரிசுதான் இந்த அரசி! தந்தையைப் போலவே பாப்பரசரின் வேதத்தை மறுதலித்து தன்னையே இங்கிலாந்தின் ஆங்கிளிக்கன் சபையின் தலைவியாக அறிவித்து, அவள் பட்டத்திற்கும் வரும்போது வயது 25தான்! ஆனுலும் தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடிபாயும் என்ற கதையாக கத்தோலிக்க எதிர்ப்பைக் கடைபிடித்துவந்தாள். கத்தோலிக்க வேதமே இங்கிலாந்தில் இல்லாமல் செய்ய சூளுரைத்தாள்! திவ்ய பலிபூசை, குருக்கள், கத்தோலிக்கமத அனுசாரணம் யாவும் தடைசெய்யப்பட்டது. அப்படி மீறி இங்கிலாந்தில் குருக்கள் கண்டுபிடிக்கப்பட்டால், தலைஉருளும். அவர்களுக்கு உதவி செய்பவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு சிறைப்பிடிக்கப்பட்டார்கள். ஒப்புக்கான விசாரணைக்குப் பிறகு தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டார்கள். இங்கிலாந்து திருச்சபையின் தலைவி அரசியே என்று சத்திய பிரமாணம் செய்து பாப்பரசரை மறுதலிக்காதவர்கள் தேவ துரோகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டு வயிறு கிழிக்கப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இவ்வாறாக கொடுங்கோல் ஆட்சி செய்து வந்த அவள் படித்த அறிஞர்கள், அறிவுடையோர் கல்வியாளர்களின் ஆதரவு தேவை என்பதை உணர்ந்தவராக இப்படி பல்கலைகழகங்கள், கல்லூரிகளுக்கு வருகைதந்து, தனது கொள்கைகளுக்கு அங்கீகாரத்தைப் பெற ஆசித்தாள். அதன் எதிரொலியாகத்தான் இன்றைய “ஆக்ஸ் போர்ட் விஜயம்!”

தமது அரசவை உறுப்பினர்கள் புடை சூழ மகா கம்பீரமாக வந்த அரசி தமது ஆசனத்தில் அமரவும் அவளை வரவேற்கும் படலம் ஆரம்பமாயிற்று.

அங்கே முதல் வரிசையிலே, அறிவுஜீவி, அறிஞர், சிறந்த பேச்சாளர், பேராசிரியர் என்றெல்லாம் பல்கலைக் கழகத்தில் புகழ்பெற்ற எட்மண்ட் காம்பியன். அரசியை வரவேற்று சொற்பொழிவாற்றும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. கன்னியமாக உடையணிந்திருந்த காம்பியன் மிடுக்கான நடையில், அரசியை வணங்கிவிட்டு

சொற்பொழிவு மேடையேறி தமது அறிவார்ந்த நடையில் கணீர்குரலால் வரவேற்புரை நிகழ்த்தினார். அரசியை வாழ்த்தி பேச அவர் கையாண்ட நாவன்மையைக் கண்டு அவையோர் ஆர்ப்பரித்து மகிழ அரசியின் முன்னோர்கள், அவளது ஆட்சி, அவளோடு வந்திருந்த அமைச்சர் பெருமக்கள் என அனைவரையும் பாராட்டி பேசிய காம்பியனின் குரல் அந்த அரங்கத்தின் கையொலியால் கரைந்துபோனது. அவரது பேச்சு திறமையில் உள்ளம் நெகிழ்ந்து மகிழ்ந்த அரசியின் முகம் பிரகாசமடைந்தது. வரவேற்புரையை நிகழ்த்தி முடித்து தலைகுனிந்து அரசியை வணங்கிய காம்பியனுக்கு வயது 26! தமது அறிவுத் திறமையால் "இங்கிலாந்தின் இரத்தினம்" என்று பட்டம் சூட்டப்பட்ட எட்மண்ட பேரொலியால் எழுந்த கரவொலியால் பெருமை பொங்க மேடையை விட்டு இறங்கினார்.

ஆனால், அதே எட்மண்ட் காம்பியன் 15 ஆண்டுகளுக்குப்பிறகு அரசியால் "தேசதுரோகி" என்ற பட்டம் சூட்டப்பட்டு கொடூரமாய் தூக்கிலிடப்பட்டு வேதசாட்சியடைந்தார்! ஆம், அதுவே தேவ திருவுளம்! சத்திய வேதமாம், கத்தோலிக்க திருச்சபையின் விசுவாசத்திற்காக அவர் இரத்தம் சிந்தினார்.


முதலாம் எலிசபெத் அரசி

## மனந்திரும்பிய காம்பியன்!

1540 - ம் லண்டன் மாநகரில் பிறந்த எட்மண்ட் காம்பியனின் தந்தை ஒரு புத்தகவியாபாரி. அதனால் தானோ என்னவோ படிப்பில் சிறந்து விளங்கினார். தமது 17வயது வயதில் அர்ச். ஜான் கல்லூரியில் ஃபெல்லோஷிப் பட்டம் பெற்றார். அவர் எவ்வளவுக்கு அறிவுத்திறமையும், நாவன்மையும் கொண்டிருந்தாரானால், அவரைச் சுற்றி எப்போதும் சக மாணவக் கூட்டம் இருக்கும். அவரது பேச்சை, அதில் மிளிரும் அறிவுத்திறமையை சாதூரியத்தை, பழக்க வழக்கங்களை கண்டு பாவிக்கவும், அன்றைய மாணவர்களிடையே ஒருவித ஆவல் இருந்தது. அதனாலேயே அவரோடு சுற்றித் திரிந்தவர்களை "காம்பியன் கூட்டத்தார்" என்று அழைக்கப்பட்டார்கள். அறிவியலில், தத்துவ சாஸ்திரத்தில், லத்தீன் மொழியில் புலமை பெற்று "அசாதாரணமான மாணவன்" என்ற பெயர் பெற்றுர். ஏழ்மையில் இருந்ததால் அவரது படிப்புச் செலவிற்காக சலுகையும் உதவித்தொகையும் பெற்றார்.

ஆக்ஸ்போர்ட் பல்கலை கழகக் கல்லூரியில் தத்துவ சாஸ்திரம் கற்றுக்கொண்டிருக்கும் போதுதான அங்கே அரசி எலிசபெத்தின் வருகை நிகழ்ந்தது. அவளை வரவேற்பளிக்கத் தெரிவு செய்யப்பட்ட காம்பியனும், தமது அறிவார்ந்த உரையால் அரசியின் பெருமதிப்புக்குள்ளானார். அரசவை கூட்டங்களில் உரையாற்ற அழைக்கப்பட்ட அவர் "**இங்கிலாந்தின் இரத்தினம்** " என்று கௌரவப்பட்டம் பெற்றுர். அரசாங்க ஆதரவு அவருக்கு, இருந்ததால் பிற்காலத்தில் உயர்பதவிகள் காத்திருந்தன.

எலிசபெத் அரசி ஆட்சி பொறுப்பேற்கும் வரை கத்தோலிக்கராயிருந்த இவரது குடும்பம், பாப்பரசரின் அதிகாரத்துக்கு விரோதமாக சட்டம் இயற்றப்பட்டபோது, அதை ஆதரித்து ஆங்கிலிக்கன் சபையில் சேர்ந்தது. தமது கல்வி, எதிர்காலம் கருதிய எட்மண்ட், அரசியே இங்கிலாந்து திருச்சபையின் தலைவர் என்ற சத்திய பிரமாணத்தை செய்தார். புராட்டஸ்டாண்ட் ஆங்கிளிக்கன் சபையில் சேர்ந்திருந்தாலும் அவரது மனதில் ஒரு கலக்கம் தோன்றியது. ஏனெனில் தத்துவ சாஸ்திரம் கற்கும்போது திருச்சபையின் பிதாபிதாக்கள் எழுதிய நூல்களையும் கற்க நேரிட்டது. அவர்களது கத்தோலிக்க விசுவாச உறுதியையும், அதுவே சத்திய வேதம் என்பதை சுட்டிக்காட்ட அவர்கள் தந்த ஆதாரங்களையும் கண்டு உள்ளம் தாக்குண்டவரானார். இந்நிலையில் தான் ஆங்கிலிக்கன் சபையில் தியோக்கன் பட்டம் பெற்றார்.

பலருடைய மதிப்பையும், நட்பையும் பெற்று உயரிய பதவியடைய வாய்ப்பிருந்த போதிலும் தான் ஆங்கிலிக்கன் சபையில் பட்டம் பெற்றது அவரை உறுத்திக் கொண்டேயிருந்தது. அவரது ஆன்மா சத்தியத்தை நாடி தேட அம்முயற்சியில் இறங்கிய காம்பியன் திருச்சபையின் வரலாற்றை படிக்கலானார். பல பிதாப்பிதாக்களின் நூல்களை கற்று உணரலானார். இப்போது அவரது மனம் தவிக்கலாயிற்று. இங்கிலாந்து நாட்டின் அர்ச். அகஸ்டின் காண்டபூரி, அர்ச். எட்வர்ட் அரசன் மற்றும் வேதசாட்சியாக மரித்த அர்ச். தாமஸ் பெக்கட் போன்றோர் சார்ந்திருந்த கத்தோலிக்க சபை உண்மையானதா? எலிசபெத் அரசியை தலைமையாகக் கொண்ட ஆங்கிலிக்கன் சபை சத்தியமான வேதமா? என்று அங்கலாய்த்த அவரது உள்ளம், அனைத்தையும் சீர்தூக்கிப்பார்த்து உண்மையான வேதம் கத்.திருச்சபைதான். தாம் இருக்கும் ஆங்கிலிக்கன் புராட்டஸ்டாண்ட் ஒரு பதிதம்! அங்கு சேசுகிறீஸ்து இல்லை! அவரது உண்மையான போதனைகளும் இல்லை. அங்கு ஆன்ம இரட்சிப்பு இல்லை. ஆம்! இரட்சிக்கப்பட சேசுகிறீஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்ட சத்திய வேதமான பாப்பரசரை தலைவராகக் கொண்ட கத்தோலிக்க திருச்சபையே என்பதை அறிந்து உணர்ந்து கொண்டார். கத்தோலிக்கரானார்.

**தேவ அழைத்தல்**

*அக்காலத்தில் இங்கிலாந்து தேசத்திலிருந்து கத்தோலிக்க வேதம் அழிக்கப்பட்டு விட்டதால், அதனை மீண்டும் ஏற்படுத்த ஆங்கில கத்தோலிக்கர்கள் விரும்பினார்கள். கத்.விசுவாசத்திற்கு பிரமாணிக்கமாயிருந்த எண்ணற்ற ஆங்கில நாட்டு மக்களுக்கு தேவ திரவிய அனுமானங்களை நிறைவேற்றவும், விசுவாசத்தில் அவர்களை உறுதிப்படுத்தவும் குருக்களை உருவாக்க முயற்சி நடந்தது. அதனால் பாப்பரசரின் ஆதரவில் பிரான்ஸ் நாட்டில் துவே* (Douay) *என்ற இடத்தில் குருமடம் ஏற்படுத்தப்பட்டு, அங்கு சிறந்த ஆங்கில நாட்டு இளைஞர்களை குருப்பட்டத்திற்கு தயாரித்து குருக்களாக்கி இரகசியமாக இங்கிலாந்து நாட்டிற்கு அனுப்பப்பட்டு வந்தனர். ஆனால் அப்படி இரகசியமாக இங்கிலாந்து நாட்டுக்குள் வரும் குருக்களை இனங்கண்டு கைது செய்ய அரசியின் ஒற்றர்கள் கடற்கரையோரம் நிலை கொண்டிருந்தது வேறு விஷயம்!*

*அப்படிப்பட்ட குருமடத்தில் குருத்துவ பயிற்சி பெற காம்பியனின் உற்ற தோழரான கிரகோரி மார்டின் என்பவர் பிரான்ஸ் நாடு சென்றார். குருமடம் சென்ற அவர் நல்ல உள்ளம் கொண்ட காம்பியனையும் அங்கே அழைத்தார். அதுபோலவே, மற்றொருவர் அர்ச். துர்தி பார்ட் மாயீன் என்பவரும் நாடு கடந்து சென்று குருப்பட்டம் பெற்றார். பின்னர் இங்கிலாந்து நாட்டிற்கு வந்து, பிடிபட்டு வேதசாட்சியம் அடைந்தார் என்பது வேறு வரலாறு. இவற்றால் உள்ளம் கவரப்பட்டு உறுதியடைந்த காம்பியன் பாப்பரசருக்கு விரோதமாக தாம் கொடுத்த சத்திய பிரமாணத்திற்கு மிகவும் மனஸ்தாபப்பட்டு வருந்த தன்னை முழுவதும் தேவ ஊழியத்திற்கு அர்ப்பணிக்க விரும்பினார்.*

*அச்சமயத்தில்தான் தம்மை ஆங்கிலிக்கன் சபையில் தியாக்கோன் பட்டம் பெறத் தூண்டிய ரிச்சர்டு ஷென்னே* (Richard Cheney) *என்ற ஆயருக்கு நீண்ட கடிதம் எழுதினார். கத்தோலிக்க மனப்பான்மை கொண்ட அந்த ஆயர், ஆங்கிலிக்கன் சபையில் பிஷப்பாக இருந்தார். கத்தோலிக்கரான எட்மண்ட் காம்பியன் அவரது தவறான கொள்கையைச் சுட்டிக்காட்டி கண்டித்து ஒரு கடிதம் எழுதினார். அதில்: "60 வயதாகிவிட்ட தாங்கள், நிலையில்லாத உடல் ஆரோக்கியத்தையும், தப்பறையின் மீது வெறுப்பையும் கத்தோலிக்கர்கள் மீது இரக்கமும் கொண்டவர். உங்கள் மனசாட்சிக்கு விரோதமாக ஆயர் என்று அழைக்கப்பட்டீர்கள். உமது மௌனத்தால், நீங்கள் விரும்பாத, சாபத்துக்குரிய புராட்டஸ்டாண்ட் பிரிவினையையும் வளர்த்தீர்களே. அதனால் கிறீஸ்துவின் வரப்பிரசாதங்களை பெற முடியாது இருக்கிறீர்கள். தாங்கள் எல்லா ஜெபங்களுடையவும், பலிபூசைகளுடையவும், தேவ திரவிய அனுமானங்களுடையவும் நன்மைகளையும், பலன்களையும் இழந்து போய் இருக்கிறீர்களே! பதிதமதத்தில் என்னதான் எதிர்ப்பார்க்கிறீர்கள்? உமது வாழ்வுதான் என்ன? எதில் நம்பிக்கைக் கொண்டிருக்கிறீர்கள்?....." என்றெல்லாம் எழுதி அவரை தப்பறையிலிருந்து மீட்டு சத்திய வேதமான கத்தோலிக்க திருச்சபைக்கு வரத் தூண்டினார். ஆனால் அந்தோ! ஆயர் ஷென்னே எந்த முடிவையும் எடுக்காமல் மரணமடைந்தார்!*

*கத்தோலிக்கத் திருச்சபையில் உட்பட்ட எட்மண்ட காம்பியனின் வாழ்வு தலைகீழாக மாறிப் போனது!*

*(தொடரும்)*

---

*3-ம் பக்கத்தொடர்ச்சி*

*அதோடு, "...(ஆன்ம) தேவையால் செயல்படுகிறவர்கள் தண்டனைக்குரியவர்கள் அல்லர்" என்ற திருச்சபை சட்டம் எண் 1323-யும் ஆண்டகை அவர்கள் அறியாதவரல்லர்.*

*ஆகவே, சுமார் 10 வருடங்களாக (சில அற்பக் காரணங்களுக்காக) அநுமானங்கள் மறுக்கப்பட்டு, புறக்கணிக்கப் பட்டு வேதனைப்பட்ட விசுவாசிகளின் (ஆன்ம) தேவையால் பாரம்பரியத்தை (மரபு) கைகொண்டு திருச்சபையின் போதனைகளுக்கும், ஐக்கியத்திற்கும் பிரமாணிக்கமாக இருந்துவரும் அர்ச். 10-ம் பத்திநாதர் சபை குருக்களால் நிறைவேற்றப்படும் தேவதிரவிய அநுமானங்களை பெறுபவர்கள், பங்கேற்பவர்கள், ஆதரவளிப்பவர்கள் திருச்சபை விலக்கம் என்ற தண்டனைக்குரியவர்கள் அல்லர் - தண் டனை பெறவும் முடியாது என்பதை ஆண்டகையவர்களுக்கு பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எனவே, மேதகு வந். நீதிநாதன் ஆண்டகையவர்களுக்கு, அவர் கத்தோலிக்க மேற்றிராணியார் என்கிற வகையில் எமது மேலான வணக்கத்தையும், சங்கையையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆன்ம சரீர நலன்களுக்காக அனுதினமும் ஜெபித்து வருவதாகவும் அன்போடு கூறிக்கொள்கிறோம்.*

*ஆகவே, கத். திருச்சபையின் பாரம்பரியத்தை பிரமாணிக்கத்துடன் அநுசரித்து, போதித்து வரும் அர்ச். 10-ம் பத்திநாதர் சபை குருக்கள் என்றும் கண்டனத்துக்குரியவர்கள் அல்லர் என்பதையும், அவர்களை ஆதரித்து, ஊக்குவிப்போர், தங்களது மேலான கிறீஸ்தவ கடமைகளை செய்பவர்கள் ஆவார்கள் என்பதையும் இதனால் தெரியப்படுத்த விரும்புகிறோம்.*

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி SSPX**

Society of St. Pius X

#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com (or) rajakumar@sspx.com